
# அஞ்சலி

தீபம் - 02 சுடர் - 02 தை - பங்குனி 2009

16 SEP 2011
PUBLIC LIBRARY
JAFFNA



உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

# அஞ்சலி

உள, சமூக, ஆன்மீக, இலக்கிய சஞ்சிகை

தீபம் - 2
சுடர் - 2. விலை - 35/=

## உள்ளே...

ஆசிரியர் எழுதுகின்றார்
மனம் போல் வாழ்க்கை
சிரிக்கலாம் வாங்க
மாணவர்களின் வளர்ச்சியில்
ஊன்றுகோளாக...
அறிவுக்களம்
சக்தி வழிபாட்டில் காயத்திரி மந்திரம்
சமய கலாச்சாரங்கள்
சிறுவர் சிந்தனையிலிருந்து...
கிறீஸ்தவமும் தமிழும்...
வாழ்க்கையின் விதி
கோபம் கொள்வது குற்றமா?
பொது அறிவுப்போட்டி
தோழமையுடன் தோழனே தோழியே
உள்ளங்களின் எண்ணங்கள்
உன் வாழ்வு உன்னைக் காதலிக்கும்

'அஞ்சலி அகம்'
நெல்லண்டை வீதி,
தும்பளை,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**ஆசிரியர்**
அருட்தந்தை S.டேமியன்O.M.I (MA)

**ஆலோசகர் குழு**
அருட்தந்தை T.எட்வின்O.M.I
அருட்சகோதரர் மனோ பஸ்ரி
ஜயந்தO.M.I

**ஒருங்கிணைப்பாளர்**
அ.சங்கீதா

**நிர்வாகக் குழு**
அஞ்சலியக பணியாளர்கள்
அஞ்சலி இளையோர் சமூகம்

**கணினி வடிவமைப்பு**
ஜெஸ்வின் கணினி பயிற்சியகம்
2ம் குறுக்குத்தெரு.
பருத்தித்துறை.

**பதிப்பகம்**
New S.P.M. V.M. Road,
Point Pedro

'Anjali Aham'
Nellandai Road,
Thumpalai,
Point Pedro,
Jaffna, Sri Lanka.

PUBLIC LIBRARY
JAFFNA



# ஆசிரியர் எழுதுகின்றார்.......

## *அவலங்கள் மத்தியிலே அர்த்தத்தைத் தேடி.........*

பேரவலங்கள், அழிவுகள், அனர்த்தங்கள், மரணங்கள், இழப்புக்கள் இவைகள்தான் இன்று எமது வாழ்க்கையாக மாறிவிட்டன. இவைகள் நமது வாழ்க்கையை வாழ்வின் விளிம்பிற்கே தள்ளிவிட்டன. வாழ்வின் பொருள் என்ன? கருத்து என்ன? அர்த்தம் என்ன? என்பது இக்கால கட்டத்தின் ஒவ்வொரு மனிதனின் மனதிலும் எழுகின்ற மௌன வினாவாகும். இந்த அவலங்களிலுள்ள மனிதனின் இருப்பே கேள்வியாகி விட்டது. வாழ்வே வெறுமையாகி விட்டது.

இந்த அவலங்கள் மத்தியில் வாழ்விற்கு ஏதாவது விடையுண்டா? அர்த்தமுண்டா? என்பதை வாழ்ந்து அனுபவித்த விக்டர் பிராங்கிள் என்ற உளவியலாளர் அடைபட்ட முகாம்களிலே இருந்து வாழ்வின் பொருளைத் தேடினார். இந்த அவலங்களின் பின்னால் வாழ்வின் பொருளை உணர்ந்தார். இந்த அவல வாழ்வின் நிகழ்வுகள் வாழ்வை உறுதிப்படுத்தினதே தவிர மனமுடையச் செய்யவில்லை என்பதை உணர்ந்தார். வாழ்வின் எந்த ஒரு நிலையிலும் குறிப்பாக அவல நிலையில் ஒருவன் தன்னுடைய வாழ்வின் பொருளை, விழுமியங்களை எத்தகைய மனப்பாங்குடன் தெரிவு செய்து கொள்கின்றான் என்பதே முக்கியம் என்பதே அவர் கண்ட முடிவாகும். ஒரு அவலத்தின் போது ஒரு மனிதனிடமிருந்து எல்லாவற்றையும் பறித்தெடுத்துக் கொள்ளலாம். ஆனால் அவல நேரத்தில் அவனிடம் உள்ள வாழ்வின் தெரிவிற்கான சுதந்திரத்தை, மனப்பாங்கை ஒருவராலும் எடுக்க முடியாது என்பதாகும்.

வாழ்வின் அவலங்களைச் சந்திக்கின்ற வேளைகளில் எம்முடைய மனப்பாங்கு வாழ்வின் தெரிவு எப்படி என்பதை நினைந்து உள்ளார்ந்த சுதந்திரத்தோடு வாழ்விற்கு அர்த்தம் கொடுக்கக் கூடிய விழுமியங்களைத் தெரிவு செய்து அவலத்திலும் அர்த்தம் கண்டு வாழ்வை நிறைவுடன் வாழ்வோம்.

"பரம்பொருளே நாம் அனுபவித்துக்கொண்டிருக்கும் பேரவலத்திலிருந்தும் துயரத்திலிருந்தும் உன்னைத் தவிர வேறு யார் எங்களைக் காப்பாற்றுவார்? அவலங்கள் மத்தியிலே அர்த்தத்துடன் வாழ்வின் விழுமியங்களை தெரிவு செய்து வாழும் மனப்பாங்கையும் மனப்பக்குவத்தையும் தந்தருள்வாய்".

அருட்தந்தை.எஸ்.டேமியன்(அ.ம.தி)
இயக்குனர்
அஞ்சலி அகம்



# மனம் போல் வாழ்க்கை

"நான் ஒன்றுக்கும் லாயக்கற்றவன்"
"என்னால் **maths** செய்ய முடியாது"
"என்ர மூக்கு வடிவில்லை"
"இவங்களுக்கு எதுவுமே செய்யமுடியாது"
"ஏன் தான் மனிதனாகப் பிறந்தேனோ?"

இதுபோன்ற பல வார்த்தைகளை தினமும் உச்சரித்துக்கொண்டு வாழும் பல்லாயிரம் மக்களிடையே வாழும் மனிதர்களுள் நானும் நீயும் ஒருவர் தான். வாழ்வு சுமையாகி சுவையற்று அருவருப்பாக தோன்றும் அற்ப எண்ணங்களுடன் பலர் வாழ வழி தெரியாது வாழும் போது என்னுடைய உன்னுடைய தெரிவுகள் எவை? தோல்விகளும் விரக்திகளும் எம்மில் பலரின் இருப்புக்களாக மாறிவிட்ட சூழலில் எமது பணிதான் என்ன? இவை என்னுடைய இலக்குகளையும் இருப்புக்களையும் சரி செய்ய முனைகின்றன. நீயும் சற்று சிந்தித்துப்பார்........

## வெற்றியின் அடிப்படை

"மனித வாழ்வு தோல்விகளில் முடிவு பெறும் ஒன்றல்ல" எனும் இவ்வார்த்தைகளை வாசிக்கும் போது என்னை நீ ஏசலாம் இருப்பினும் தொடர்ந்து வாசி சில விடயங்களில் தெளிவு பெறுவாய்.

"வெற்றி என்பது தோல்விகளற்ற ஒரு நிலையல்ல. இறுதி இலக்குகளை அடைவது என்பதிலேயே அடங்கியுள்ளது. போரில் வெற்றி பெறுவது என்பது ஒவ்வொரு களத்திலும் வெற்றி பெறுவது என்பதல்ல" என்ற எட்வின் C. பிளிஸ் என்பவரது வார்த்தைகள் உனக்கு இப்பொழுது என்ன சொல்கின்றது சற்றுக் குறித்துக்கொள்...... நீயும் கூட வெற்றி பெற வேண்டியவன். வெற்றி பெற வேண்டியவன் வெற்றி பெறுவதே உன் இலக்கு உன்னுடைய கடந்த கால முயற்சிகளை எண்ணிப்பார். உன்னுடைய ஒவ்வொரு முயற்சியிலும் நீ தோற்றுப் போக வேண்டும் எனும் உணர்வுடன் நீ எப்போதாவது ஈடுபட்டாயா?

உதாரணமாக உன்னிடம் கேட்கின்றேன்! பரீட்சை ஒன்றில் நீ தோற்றும் போது "0" எடுக்க வேண்டும் அல்லது எல்லா மாணவரையும் விட கடைசி நிலையில் இருக்க வேண்டும் என்று சிந்தித்தாயா? நிச்சயமாக வெற்றி பெற வேண்டும் எனும் எண்ணமே உன்னிடம் அதிகமாக இருந்திருக்கும் அல்லவா? இருப்பினும் நீ ஏன் பிறரைப் போல இதுவரை வெற்றி பெறவில்லை? சற்று சிந்தித்துப்பார்! முழுவதுமாக விரைவாக வாசித்து முடிக்க எண்ணாதே சற்று நின்று சிந்தித்துப்பார், தேடிப்பார், தெளிவுபெறு. நீ கடந்து வந்த வாழ்வில் நீ பெற்ற பாரிய வெற்றிகளையும், சாதாரண வெற்றிகளையும் சற்று பட்டியலிட்டுப்பார்.. இதனை உன்னுடைய உறவிலே, பணியில், கல்வியில், முயற்சியில் நீ இதுவரை பெற்ற சாதாரண, மற்றும் பாரிய வெற்றிகளை சற்று பட்டியலிட்டுப்பாரேன்.......

மனிதர்களை வெற்றியின் அடிப்படையில் நான்கு வகைப்படுத்துகின்றேன்.

இவற்றுள் நீ எந்த வகை என சிந்தித்துப்பார்.

அ) இலக்கற்றவர்கள்:- எதையுமே தன் வாழ்வில் சாதிக்காமல் மடிந்து போனவர்கள்

ஆ)பிரயோசனமற்றவர்கள்:- எதையாவது சாதிக்க வேண்டும் என விரும்பியும் சாதிக்காமல் இறந்து போனவர்கள்.

இ) அதிஸ்டசாலிகள்:- சந்தர்ப்பவசத்தால் சிலவற்றை சாதித்து இறந்தவர்கள்.

ஈ) வெற்றியாளர்கள்:- குறிப்பிட்ட விடயத்தை சாதிக்க எண்ணி அதனை சாதித்து நிலைநாட்டி இறந்தும் வாழ்ந்தும் கொண்டிருப்பவர்கள்.

இந்த நால்வருள் நீ எந்த வகையினர்? சீவ் கேரா எனும் தலைமைத்துவ பயிற்சியாளர் "வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களை செய்பவர்களல்ல. மாறாக அதே செயலை சற்று வித்தியாசமாக செய்பவர்களே தான்" என்று கூறுகின்றார். எத்தனை செயல்கள் செய்கின்றோமல்ல எதனை எப்படி அல்லது எவ்வாறு செய்கின்றோம் என்பதெ முக்கியமல்லவா? உன்னிடம் முதலில் ஒரு கேள்வி எழுப்பினேன். அக்கேள்வியை மீண்டும் கேட்கிறேன் ஏன் நாம்

தோல்வியடைகின்றோம்? உனக்கும் எனக்கும் ஆற்றலோ ஆளுமையோ அறிவோ அனுபவமோ இல்லை என்பதாலா? இல்லை நிச்சயமாக இல்லை சில தடவைகளில் என்னிடமும் உன்னிடமும் ஆர்வம் வழிகாட்டல் அர்ப்பணம் சீரிய நடத்தை என்பன இன்மையே காரணமாக இருந்திருக்கும் சற்று கவனித்துப்பார்...........

## *வெற்றிக்கு மனநிலை மாற்றம்*

வெற்றி நீ பெறவேண்டுமாயின் உன் வாழ்வில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் அவசியமான ஒன்று உனக்கும் அவசரத் தேவையாக இருக்கும். அது எதுவுமல்ல உனது மனநிலை பற்றியே பேசுகின்றேன். இது உனக்குள் இருந்து உன்னை நெறிப்படுத்தி வழிப்படுத்தி வாழ்வின் நிறைவைக் காண தூண்டுகின்றது. இதற்கு இன்றைய உலகின் விந்தை எனக் கருதப்படும் கணனியை சற்று உதாரணமாக தருகின்றேன். கவனித்துப்பார் அதன் உண்மை புரியும். கணனியில் வன்பொருள் மென்பொருள் என இரு வகை உண்டு.

இதனுள் வன்பொருட்களான மொனிற்றர், கீபோட், மவுஸ் UPS என கூறுவர். இந்தக் கணணி இயங்க வேண்டுமாயின் மென் பொருட்களின் தேவை மிகமிக அவசியம் என்பது உனக்கும் தெரியுமல்லவா? இக்கணணியில் காணப்படும் வன்பொருளை சிறப்பாக மனித மூளையுடனும்;(Brain) மென்பொருளை மனிதனின் மனத்துடனும்;(Mind) ஒப்பிடுவர். கணணி இயங்க மென்பொருள் அவசியமாவது போல் மனிதன் வெற்றியை நோக்கி இயங்க வெற்றிக்குஅடிப்படையான அம்சங்களுடன் இருக்கக் கூடிய மனம் மிகமிக தேவையானது என நானும் கருதுகிறேன். உன்னுடைய வாழ்வில் நீ பெற்ற சாதாரண அபார வெற்றிகளை பட்டியலிடக் கூறினேன். நீ பெற்ற வெற்றிகளின் அடித்தளம் உன்னுடைய மனநிலை என்பது உனக்கும் நன்றாகவே புரியும் நீயும் புரிந்திருப்பாய். இதனைத்தான் “மனம் போல் வாழ்வு” என்பார்கள்.

## வாழ்விற்கு நேர்மய எண்ணங்கள்

நீ உன் வாழ்வில் அண்மையில் சந்தித்த "தோல்வியை"எண்ணிப்பார். அதனுடைய அடித்தளம் எப்படி இருந்தது? "நான் எங்க வெற்றி பெறப் போகிறேன், எனக்கு எவர்தான் உதவி செய்வார்கள், நான் அதிஸ்டசாலி இல்லை, எனக்கு எங்க கிடைக்கப் போகுது" இது போன்ற உன்னுடைய "நம்பிக்கை" நிறைந்த வார்த்தைகளை உன்னுடைய உதடுகளால் மட்டுமல்ல ஆழமான உன் எண்ணத்தில் பதிந்து வைத்திருப்பாய் சற்று சிந்தித்துப்பார்....... "வெற்றி" எனும் போதும் "தோல்வி" எனும் போதும் உன் எண்ணத்தில் உடனடியாகத் தோன்றுவதுதான் என்ன? நேர்விகித எண்ணங்களா எதிர்மய எண்ணங்களா உன் மனதில் அதிக ஆதிக்கம் பிடித்துள்ளன? நேர்விகித எண்ணங்கள் உனக்கு அதிக வெற்றி வாய்ப்புக்களைத் தரும். எதிர்மய எண்ணங்களோ என்றுமே உனக்கு தோல்வியை மட்டுமே விட்டுச்செல்லும்.

ஒரு சிறிய கதையுடன் இதனைத் தற்போதைக்கு நிறைவு செய்கிறேன். ஒரு அழகிய கிராமம், அதிகமான மக்கள், இந்தக் கிராமத்தின் வாயிலில் ஞானி பல காலம் வசித்து வருகின்றார். இது என்ன பழைய கதைதான் இவரும் கதை விடுகிறார் என்னும் உன் எண்ணமும் நியாயமானது. இருப்பினும் இந்தக் கிராமத்திலே தன்னுடைய மகனுக்கு ஒரு மருமகள் பார்க்கும் எண்ணத்துடன் ஒருவர் வருகின்றார். கிராம வாயலின் மரநிழலில் ஓய்வெடுக்கவும் கிராமத்து மக்களைப் பற்றி விசாரிக்கவும் எண்ணியவர் அந்த ஞானியிடம் அந்தக் கிராமத்து மக்கள் எப்படி? எனக் கேட்டார். அப்போது ஞானி ஒரு கேள்வியைக் கேட்டார். உங்கட ஊர் மக்கள் எப்படிப்பட்டவர்கள்? "எங்கட சனமோ படு பொல்லாத ஆட்கள், எப்பவும் சண்டை, ஒரே பிரச்சினை மனுசன் அங்க இருப்பானா? என்றெல்லாம் தனது விசனத்தை வெளியிட்டார். பதிலாக ஞானியும் "இந்த மக்களும் இப்படித்தான் " என்று கூறவும் மருமகள் தேடி வந்தவர் கிராமத்திற்குள் சென்று மறையும் போது இன்னுமொருவர் அதே நோக்கத்துடன் அதே கேள்வியை அதே ஞானியிடம் கேட்டார். ஞானியும் பழைய கேள்வியை இப்புதியவரிடம் கேட்க புதியவரின் பதில் புதுமையாக இருந்தது. "எங்கட சனம் நல்ல சனம், ஒற்றுமையானவர்கள், ஒருவருக்கு ஒன்று என்றால் எல்லோருமே நிப்பினம்.........." என்று தொடர்ந்த போது அந்த

ஞானியும் "இந்த மக்களும் இப்படித்தான்" என்ற போது வந்தவர் திருப்தியுடன் ஊருக்குள் நுழைந்தார். மறுநாள் காலை முதலில் வந்தவரே முதல் வந்தார். அப்போது ஞானி அவரிடம் "எப்படி எங்கட மக்கள்?"எனக் கேட்ட போது "எங்கட சனத்தை உரிச்சு வச்ச மாதிரி இருக்கு"என்று சலித்துக்கொண்டு விடைபெற்ற போது அடுத்த நபரும் அருகில் வரவே ஞானியும் அதே கேள்வியை இவரிடம் தொடுத்த போது "எங்கட கிராமத்தை போட்டோக் கொப்பி எடுத்து வச்ச மாதிரி இருக்கு" என்று மனம் குளிரக் கூறிச் சென்றாராம். கதை எப்படி இருக்கு என்பதை விட நானும் நீயும் எந்த வகை மனிதர் என்ற கேள்விக்கான விடையைத் தேடிப் பார்ப்போமா?

*அருட்பணி சி. லியோ ஆம்ஸ்ரோங்*

## சிரிக்கலாம் வாங்க



கவிதா:- இது பொங்கலிற்கு வாங்கின சட்டையா சோபி?

சோபி :- இல்ல இது எனக்கு வாங்கின சட்டை.

கண்டெக்ரர்:- நான் ஒரு பஸ் கண்டக்ரர் என்று எப்படி கரெக்டா கண்டு பிடிச்சீங்க.

வேலு :- சில்லறைப் பிரச்சனைக்கெல்லாம் கோபப்படுறீங்களே . . .

ராமு:- நேற்றுக் கூட்டத்தில தலைவருக்குக் கல்லெறிஞ்சது யாரெண்டு கண்டு பிடிச்சிட்டாங்களாம்.

சோமு:- எப்படிக் கண்டுபிடிச்சாங்க?

ராமு:- கூட்டத்திற்கு வந்தது ஒருவர் தானாம்.

கண்ணன்:- எங்க மாமா பையன் ஒரு நாளைக்கு எட்டுச் சட்டை மாத்துவான்.

பாலு :- அப்படியா! அவர் என்ன வேலை செய்கிறார்.

கண்ணன்:- அட நீங்க அவன் இப்பத்தான் மூணு மாதக் குழந்தை

சாப்பிட வந்தவர் - உங்கள் பரிமாறுபவரைக் கொஞ்சம் கண்டிச்சு வையுங்க

ஹோட்டல் முதலாளி - ஏன்? என்னாச்சு

சாப்பிட வந்தவர் - கடைக்கு நீங்க ஔவையார் ஹோட்டல் என்று பெயர் வச்சிருக்கீங்க. அதுக்காக சுட்ட இட்லி வேணுமா? சுடாத இட்லி வேணுமா? என்று கேட்கிறார்.



## *மாணவர்களின் வளர்ச்சியில் ஊன்றுகோலாக இருப்பவர்கள் ஆசிரியர்களே.*

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே அவன் நல்லவனாவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே" என்ற கருத்திற்கிணங்க ஒரு குழந்தையின் எதிர்காலத்தைத் தீர்மானிக்கும் உரிமை பெற்ற தாய்க்கு அடுத்தபடியாக ஆசிரியருக்கே உரியது என்றால் அதற்கு மறுகருத்துக் கிடையாது. அரசன் எவ்வழியோ குடியும் அவ்வழியே என்பதைப் போன்று ஆசிரியர் எவ்வாறு செயற்படுகின்றாரோ அவ்வாறே மாணவர்களும் செயற்படுகின்றனர். சில மாணவர்கள் கல்வி கற்கும் காலத்தில் மாத்திரம் ஆசிரியரைப் பின்பற்றினாலும் பலர் தமது இறுதிக் காலம் வரை பின்பற்றுகின்றனர் என்பது யாவரும் அறிந்ததே. அதாவது தொட்டில் பழக்கம் சுடுகாடு வரைக்கும் என்ற முதுமொழிக்கிணங்க தாம் பாடசாலையில் கற்கும் போது கடைப்பிடிக்கும் பழக்க வழக்கங்களைத் தமது எதிர்காலத்திலும் கடைப்பிடிப்பதால் பலர் உயர்ந்த இடத்தில் உள்ளனர். மேலும் முன்னேற்றத்தை அடையவும் ஒவ்வொரு மனிதனுக்கும் அடிப்படையாக அமைவது பாடசாலைக் காலத்தில் ஆசிரியர் கற்றுக் கொடுக்கும் முன்மாதிரியான கல்வி வழிகாட்டல்களே. மாணவர்களின் ஆரம்பக்காலத்தில் கல்விக்கு அடித்தளம் இடுபவர்கள் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களே.

அதாவது ஆரம்பக்கல்வி மாணவர்கள் தாய்க்கு அடுத்ததாக நேசிப்பது தமது ஆசிரியரையே. அந்த வகையில் ஆசிரியர் கூறும் அனைத்தையும் நம்புவதுடன் அதன் படியே செயற்படுகின்றனர். இவ்வாறாக ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் ஓர் உயர்ந்த இடத்தைப் பெறுவதுடன் மாணவன் எவ்வழியில் செல்கின்றான் என்பதையும் தீர்மானிக்கின்றனர். பாடசாலையில் தனியே பரீட்சைக்கான கல்வி மட்டும் கற்பிக்கப்படுவதில்லை. வாழ்க்கைக்குத் தேவையான வாழ்நாட் கல்வியும் கற்பிக்கப்படுகின்றது. அதாவது கலாச்சாரம், பண்பாடு, பழக்கவழக்கம், தொழில்நுட்பம் போன்ற அனைத்தும் கற்பிக்கப்படுகின்றன. ஆரம்ப காலத்தில் ஆசிரியர்கள் சமூக முன்னோடிகளாக மதிக்கப்பட்ட போதும் தற்போது அதன் தன்மை குறைவடைந்து வருவதை அவதானிக்க முடிகின்றது. இதற்குக் காரணமாக உலகமயமாதல், தொழில்நுட்பத்தின் வளர்ச்சி, சினிமா போன்ற பலவற்றைக் கூறலாம்.

பல வழிகளில் பல சந்தர்ப்பங்களில் மாணவர்களை உயர்வடையச் செய்யும் ஆசிரியர்கள் ஏணிகள் எனப் புகழப்படுவது பொருத்தமானது. அதாவது ஆசிரியர் என்ற நிலையிலேயே இருந்து கொண்டு மாணவர்களின் வகுப்பிற்கேற்ப அவர்களைப் பல துறைகளிலும் உயர்த்தி விடுகின்றனர். இவ்வாறு மாணவர்களைக் கரைசேர்க்கக் கலங்கரை விளக்காகச் செயற்படும் குருவை மானசீகமாக நேசிப்பவன் வாழ்விலே சிறந்து விளங்குவான் என்பது அனைவரும் அறிந்ததே. இதற்குச் சிறந்த உதாரணமாக ஏகலைவனின் வாழ்க்கையைக் கூற முடியும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் கல்வியானது அவசியம்.முன்னோர்கள் பலரின் வாழ்வில் இது கானலாக இருந்தாலும் இவ்வாறு வாழ்விற்கு வழிகாட்டும் கல்வியை அனைவரும் பெறுகின்றோம் என்றால் அதற்குக் காரணம் ஆசிரியர்களே. இவர்கள் மாணவர்களின் தேவைக்கேற்ப ஆசானாகவும், பெற்றோராகவும், நண்பனாகவும், உறவினனாகவும் மாறிச் செயற்படுகின்றனர்.

உலகத்திலுள்ள ஒவ்வொருவரும் தம் பாடசாலை வாழ்க்கையை மறக்க முடியாது. மறப்பதற்குச் சந்தர்ப்பமும் இல்லை. ஏனெனில் வாழ்க்கையில் வேறெங்கும் கற்க முடியாத, பெறமுடியாத பல அனுபவங்களைப் பெறுவதும் அவற்றை மனங்களில் ஆழப்படுத்திக் கொள்வதும் அக்காலத்தில்தான். அவ்வாறு ஒவ்வொரு மனிதர்களது மனங்களிலும் ஆழப்பதிந்துள்ள நினைவுகளிற்கும் ஒவ்வொரு ஆசிரியர்கள் பின் தளமாக இருப்பார்கள். பல எதிர்ப்புகளிற்கும், மாணவர்கள் பற்றிய பல எதிர்பார்ப்புக்களிற்கும மத்தியில் தியாகமனப்பாங்குடன் கற்பிக்கும் ஆசிரியர்கள் பெற்றோர்களாலும் மாணவர்களாலும் உதாசீனப்படுத்தப்படுவது வேதனைக்குரியது. காய்த்த மரத்திற்கே கல்லடி விழும் என்பதைப் போன்று மாணவர்களின் முன்னேற்றத்திற்காகவும் சமூக முன்னேற்றத்திற்காகவும் பாடுபடும் ஆசிரியர்களே பல பிரச்சினைகளையும் துன்பங்களையும் எதிர்நோக்குகின்றனர். இவ்வாறாக பொதுநலத்திற்காக பல கடமைகளையும் பல வரலாறுகளையும் ஆழப்பதித்தஆசிரியர்கள் ஆண்டவனிற்குச் சமமானவர்கள்.

இவர்கள் மனித வடிவில் தென்படும் தெய்வங்கள். இவ்வுலகிற் பிறந்த உயிரினங்களிலே தெய்வங்களாகக் கருதப்படுபவர்கள் ஆசிரியர்களே. ஒருவனுக்கு ஏடு தொடக்கியதிலிருந்து அவன் எமலோகம் செல்லும் வரை அவனது தலைவிதியைத் தீர்மானிக்கும் தலையாய கடமையை தடைகளிற்கு மத்தியிலும் தாராளமாகச் செய்யும் ஆசிரியர்கள் போற்றத்தக்க உத்தமர்கள்.

இந்த வகையில் ஆசிரியர்களின் மனங்களைப் புரிந்து கொண்டு அவர்களின் விருப்பு வெறுப்புக்களை ஏற்றுக் கொண்டு அவர்களை வளப்படுத்துவதன் மூலம் அவர்கள் சிறந்த வினைத்திறன் மிக்க மாணவ சமுதாயத்தை உருவாக்குவார்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

T.சுமணா
4ம் குறுக்குத் தெரு
பருத்தித்துறை.

*நிகழ்காலத்தை மீட்டு எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும் இளம் உள்ளங்களில் ஒரு பிறளாத சமூகப்பற்றையும், எழுத்தாற்றலையும் இந்த அஞ்சலி ஏற்படுத்தும் என்று எண்ணுகின்றேன்.*

*சமூக வீணையில் சரிந்து கிடக்கும் நரம்புகளை அவிழ்த்துக் கட்டுவோம், அவசியமென்றால் அறுத்தும் கட்டுவோம்.*

*ஆசிரியர்.*

# அறிவுக் களம்

*பிரதேசத்திற்குப் பிரதேசம் கிணற்று நீரின் சுவை வேறுபடுகின்றது.*

கிணற்றுநீர் என்பது மழைநீர் மண்ணினூடு ஊடுருவிச் சென்று கீழே உள்ள பாறைகளில் தேங்கி நிற்கும் தரைகீழ் நீராகும். கிணற்று நீரின் சுவைக்குக் காரணம் அது தேங்கி நிற்கும் பாறைகளிலுள்ள உப்புக்கள் கரைவதே. பிரதேசத்திற்குப் பிரதேசம் பாறைகளின் தன்மை வேறுபட்ட சுவையைக் கொடுக்கும்.

*பீற்றூட் கிழங்குக்கறி சிவப்பு நிறமாக உள்ளது.*

தாவரங்களிலுள்ள நிறப்பொருட்களில் நீரில் கரையக் கூடிய நிறப்பொருளும் உண்டு, நீரில் கரையாத நிறப்பொருளும் உண்டு. பீற்றூட்கிழங்கின் கலங்களின் புன்வெற்றிடத்தில் உள்ள கலச்சாற்றில் நீரில் கரையக்கூடிய அந்தோசயனின் என்னும் செந்நிறப்பொருள் உண்டு. கிழங்கைச் சமைக்கும் போது உயர்வெப்ப நிலையில் கலமென் சவ்வு சிதைய அதன் ஒருபங்கு ஊடுபுகவிடும் தன்மை இழக்கப்பட கலச்சாற்றில் உள்ள செந்நிறப்பொருள் வெளியேறி கறிக்குச் சிவப்பு நிறத்தைக் கொடுக்கின்றது.

*வயலில் சாரைப்பாம்புகள் போன்ற பாம்புகள் இருப்பது விவசாயிகளிற்கு நல்லது.*

விவசாய நிலத்தில் பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தும் பொருட்டு ஓரங்கி பல்கிப்பெருகுமாயின் அது பீடை எனப்படும். வயல்களில் விளைவுகளை உண்டு பொருளாதார நட்டத்தை ஏற்படுத்தும் நில எலியும் ஒரு பீடையே. சாரைப்பாம்பு போன்றவை நில எலிகளைப் தேடிப் பிடித்து உண்ணும். இதனால் விவசாயிகளிற்கு நன்மை கிடைக்கும்.

*தாராவின் கால்களிற்குச் சவ்வு உண்டு, கோழியின் கால்களிற்குச் சவ்வு இல்லை.*

தாரா சேற்றில் வாழ்ந்து அதிலுள்ள புழுக்களை வடித்து உண்பது. ஆனால் கோழியோ சாதாரண தரையில் வாழும் அனைத்தும் உண்ணி ஆகும். ஒவ்வோர் அங்கியும் தாம் வாழும் சூழலிற்கேற்ப தம்மை மாற்றிக் கொள்கின்றது. இது இசைவாக்கம் எனப்படும். தாரா சேற்றில் புதையாமல் இருக்க சவ்வு அவசியம். ஆனால் கோழிக்குச் சேற்றில் வாழ வேண்டிய அவசியம் இல்லை. எனவே அவற்றிற்குச் சவ்வு இருப்பதில்லை.

*அரிசி மணியை வாயில் இட்டு மெல்லும் போது இனிக்கின்றது.*

அரிசியில் உள்ள உணவு ஒதுக்கு மாப்பொருள் ஆகும். அது இனிப்புச்சுவை உடையது அல்ல. ஆனால் அரிசி மணியை வாயிலிட்டு மெல்லும் போது உமிழ் நீரிலுள்ள தயலீன் அமிலேசு என்னும் நொதியத்தினால் மோல்ற்ரோசு என்னும் வெல்லமாக பகுதிச் சமிபாடு அடைகின்றது. மோல்ற்ரோசு வெல்லம் இனிப்புச் சுவை உடையது. எனவே தான் அரிசியை வாயிலிட்டு மெல்லும் போது இனிக்கின்றது.

*வெற்றிலை பாக்குடன் சுண்ணாம்பைப்பூசி மெல்லும் போது வாய் சிவக்கின்றது.*

காட்டிகள் எனப்படுபவை அமிலங்களிற்கு ஒரு நிறத்தையும் காரங்களிற்குப் பிறிதொரு நிறத்தையும் காட்டக்கூடிய இரசாயனப் பதார்த்தங்களாகும். பாக்குச்சாறோ ஒரு காட்டியாகும். சுண்ணாம்பு ஒரு காரமாகும். வெற்றிலை பாக்குடன் சுண்ணாம்பைப் பூசி மெல்லும் போது பாக்குச்சாறு ஆகிய காட்டி சுண்ணாம்பு என்னும் காரத்திற்குச் சிவப்பு நிறத்தைக் கொடுப்பதாலேயே வாய் சிவக்கின்றது.

க.சுதர்சன்,
தும்பளை.

*தன் "Group" இரத்தமில்லாத வேறு "Group" ரத்தம் ஏற்றப்பட்டால் ஒருவன் இறந்து போகிறான். ஆனால் நுளம்புகள் பலதரப்பட்ட இரத்தத்தைக் குடித்தும் சாகாமல் இருப்பது ஏன்?*

விஞ்ஞானிகள் மனித இரத்தத்தை A, B, AB, O என்று பிரித்திருக்கின்றார்கள். இப்போது ஒருவர் படுகாயமடைந்தாலோ அல்லது அறுவைச் சிகிச்சையின் போதோ அவரிற்கு இரத்தம் ஏற்ற வேண்டியுள்ளது. வைத்தியர்கள் அவரது இரத்தத்தையறிந்து அதனுடன் இணையும் இரத்தத்தை ஏற்றுவார்கள். "Group" சேராத இரத்தமானால் மாறுபட்ட பலனைத் தரும்.

ஒரு வகையில் இரத்தம் மனித உடலின் ஒரு பகுதி. மனிதனின் ஒரு பகுதியான இந்த இரத்தத்தை வேறு மனிதனின் உடலில் செலுத்தப்படும் போது அந்த உடல் அவருடைய "Group" இரத்தத்தோடு சேரும் வகையானால் செலுத்தப்பட்ட இரத்தத்தை ஏற்றுக் கொள்ளும். ஆனால் ஒரு நுளம்பு ஒருவனைக் கடிக்கும் போது அவனின் உடலில் இருந்து பெற்ற இரத்தத்தை உறிஞ்சி ஜீரணித்து விடுகிறது. மறுவளமாகச் சொல்லப் போனால் உறிஞ்சப்படும் இரத்தமானது நுளம்பின் இரத்த ஓட்டத்தில் கலப்பதில்லை. இதனால் நுளம்புகள் சாகாமல் உள்ளது.

*S.செந்திவேல்*
*உயிரியல்துறை.*

ஒவ்வொன்றுக்கும் அளவுண்டு தாமத்திற்கு மட்டும் அளவு இல்லை

எபிடெட்டஸ்

## சக்தி வழிபாட்டில் காயத்திரி மந்திரம்

ஓம் பூர் புவ ஸுவ:
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோயே ந: ப்ரசோதயாத்

காயத்திரி மந்திரம் என்பது மனித இனத்தின் மிகப் பழைய மறை நூலாகிய வேதத்தில் பொதித்து வைக்கப்பட்டுள்ள உலகளாவிய, எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் வழிபாட்டு வாசகமாகும்.

## காயத்திரி மந்திரத்தின் மொழி பெயர்ப்பு

ஓம்! உடல், ஆன்மா, தெய்வீக வாழ்விற்குரிய (பூர், புவ, சுவ)உலகங்களிற்கு மூலாதாரமாய் உள்ள: (தத்ஸவிதுர்) போற்றுதலுக்குரிய, யாவரிலும் மேலான தெய்வீக மெய்ம்மையின் (வரேண்யம் தேவஸ்ய தெய்வீகப் பேரொளி மீது போர்கோ): நாம் தியானிக்கின்றோம்: (தீமஹி ) நாம் மேலான உண்மையை உணரும்படி அந்த மேலான தெய்வம் (தத்): நம்(ந): அறிவுக்கு (தியோ) ஒளியூட்டட்டும். (ப்ரசோதயாத்).

இந்த காயத்திரி மந்திரத்தை இயற்றியவர் விஸ்வாமித்திரர். அவர் இந்த மந்திரத்தைத் திரும்பத் திரும்பக் கூறிய பொழுது பல அரிய ஆயுதங்கள் அவரது விருப்பத்திற்கு இணங்கக் கிடைத்தன. காயத்திரி மந்திரத்தின் மகிமையால் திரிசங்கு சொர்க்கத்தையே உருவாக்கினார். காயத்திரி மந்திரம் சூரியனுடைய ஆற்றலை நோக்கிக் கூறப்படுவதாகும். சூரியனைத் தலைமைத் தெய்வமாகக் கொண்டது. வேதங்களிற்குத் தாய் காயத்திரி. காயத்திரி ஐந்து முகங்களைக் கொண்டவள். ஐயிரண்டு கரங்களை உடையவள்.

## தத்துவ விளக்கம்

காயத்திரியின் ஐந்து முகங்களும் ஐந்து விதமாகப் பிரகாசிக்கின்றன. முத்துப் போல் ஒளிரும் முகம் ஒன்று. பவளம் போல் ஒளி வீசும் முகம் ஒன்று. பொன் போன்று பேரொளி பரப்பும் முகம் ஒன்று.

நீலவானம் போன்ற முகம் ஒன்று. தூய வெள்ளை நிறம் போன்ற முகம் ஒன்று. ஐந்து முகங்களும் பஞ்ச பூதங்களைக் குறிக்கும்.

அவளது பத்துக் கைகளிலும் பத்துவித ஆயுதங்களை ஏந்தியிருக்கின்றாள். முதல் கரத்தால் நம்மை அன்போடு அழைக்கின்றாள். இரண்டாவது கரத்தால் யாமிருக்கப் பயமேன் என்கின்றாள். மூன்றாவது கரத்தால் அன்போடு அடக்கி ஆள்கிறாள். நான்காவது கரத்தால் அன்பர்களது பகைவர்களை பாசக் கயிற்றால் கட்டி விடுகிறாள். ஆக்கும் தொழிலையும் நலமளிக்கும் தொழிலையும் அவள் கை கொண்டிருப்பதைப் போல அழிக்கும் தொழிலையும் அவள் கைக்கொண்டிருப்பதை முறையே கதை, சங்கு, சக்கரங்கள், கமலங்கள், கபாலம் ஆகியவை நமக்கு விளக்குகின்றன. மகான்களும் யோகிகளும் அன்னை காயத்திரிக்குப் பத்துப் பெயர்கள் உள்ளன எனக் கூறுகின்றனர்.

அவைபின்வருமாறு.

01. வரிக்கத் தகுந்தவள்
02. வரனைக் கொடுக்கிறவள்
03. சிறந்தவள்
04. நிறமுள்ளவள்.
05. கௌரவம் வாய்ந்தவள்.
06. வராஹி.
07. அழகிய அங்கங்கள் உள்ளவள்.
08. நீலவர்ணமான கங்கை.
09. சந்த்யா தேவி.
10. போகம், மோட்சம் கொடுக்கிறவள்.

காயத்திரிக்கு மூன்று பெயர்கள் 1. காயத்திரி, 2. ஸாவித்திரி, 3. சரஸ்வதி இந்த மூன்றுமே நம் ஒவ்வொருவர் இடத்திலும் உள்ளன.

காயத்திரி : புலன்களின் தலைவி
ஸாவித்திரி : உயிரின் தலைவி (பிராணன், உயிராற்றல்)
சரஸ்வதி : பேச்சின் தலைமைத் தெய்வம் ஆவாள் ( வாக்கு)

இம் மூவரும் எண்ணம், சொல், செயல்களின் தூய்மையைக் குறிப்பவராவர். எண்ணம், சொல், செயல்களில் தூய்மையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிப்போரிடம் காயத்திரி, ஸாவித்திரி, சரஸ்வதி மூவரும் நிலை பெற்று வாழ்வர்.

எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல, அனைத்தும் கடந்த தெய்வீகத்தை நோக்கிக் காயத்திரி மந்திரம் கூறப்படுகின்றது.அந்தத் தெய்வீகத்திற்கு ஸவிதா என்று பெயர்.

காயத்திரி மந்திரத்தை ஏன் தாயின் வடிவமாக அமைத்தார்கள்? தாய்ப்பாலை உண்டு வளரும் குழந்தையின் முகம் பிரகாசமாக விளங்கும். அது போல காயத்திரி மந்திரத்தை உச்சரிக்கும் அடியவர்களின் முகங்களில் காந்த சக்தி ஒளி வீசும். ஆகையால் காயத்திரி மந்திரத்தைத் தேவியின் திருமேனியாக, அன்னையின் வடிவமாகக் கண்டு அதைப் பெரியோர்கள் நமக்குக் கூறினார்கள்

பலன்கள்

1. முகத்தில் சாந்த ஒளி வீசும்
2. தேயஸ் உண்டாகும்
3. இந்த பிரம்ம தேயஸ் அழிவற்ற சக்தியையும், ஆனந்த வாழ்வையும், அவரவர் விரும்பும் பிறவற்றையும் அளிக்கும்.
4. நீண்ட ஆயுளுடன் வாழலாம்.
5. உடல் நலத்துடன் இருக்கலாம்.
6. பகைவர்களும் நம்மிடம் நட்பு பாராட்டுவார்கள்.

சிவஸ்ரீ. தியாக சோமஸ்கந்த ராஜக் குருக்கள் MA
நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை.

# சமய கலாச்சாரங்கள்

"அரிது அரிது மானிடராய்ப் பிறப்பது அரிது" என்கிறார் ஔவையார். இப்பூமியிலே நாம் மானிட ஜன்மம் எடுத்தது இறைவனை அடைவதற்கே என்பது ஆறுமுக நாவலர் அவர்களின் கருத்து. எனவே இவ் அரிய மானிடப் பிறப்பிலேயே நாம் இறைவனை அடைய முடியும் என்பது கண்கூடு.

மனிதன் ஒரு சமூக விலங்கு ஆவான். அவன் ஏனைய விலங்குகளிலிருந்து பல விதத்தில் வேறுபடுகின்றான். பகுத்தறியும் ஆற்றல் அவனுக்கு இருப்பதனால் அவன் தன்னைப் பற்றியும் தன்னைச் சூழ இருப்பவை பற்றியும் ஆராய்ந்து பல உண்மைகளை அறிந்தவன். எனவேதான் இவ்வுலகை படைத்தவர் கடவுளே என்றும் அவரின் பாதார விந்தங்களை அடைவதே ஏனைய ஜீவராசிகளின் படைப்பின் அர்த்தம் என்பதையும் அறிந்து அதற்கேற்ற வகையில் தன் வாழ்வைச் சீரமைத்துக் கொண்டவன்.

இந்த உலகம் மிகவும் பரந்தது. இவ்வுலகில் படைக்கப்பட்ட மனித இனத்தின் எண்ணிக்கை எண்ணற்றது. இனத்தால், மதத்தால், நிறத்தால், சாதியால் பல பிரிவுகளாக மனிதன் காணப்படுகிறான். எந்த மூலையில் இருந்தாலும் எந்த இனத்தவனாக இருந்தாலும் எங்கும் மக்கள் தமக்கு மேற்பட்ட ஒரு சக்தி இருப்பதையும் அதைத் தொழுவதையும் நாம் காணக்கூடியதாக இருக்கிறது. இவ்வாறு மனிதன் சமய வாழ்க்கையை வாழ்வதனாலேயே நீண்ட காலம் மானிட ஜன்மம் நிலைத்திருக்கக்கூடியதாக உள்ளது எனலாம். பல்வேறு சமயங்களும் ஆண்டவனை நாம் அடைவதற்கான வழிகளைக் காட்டுகின்றன.அவை தம்மை அடையாளப்படுத்துவதற்காகத் தனிப்பட்ட கலாச்சாரங்களை உடையன. எனினும் எல்லாச் சமயங்களும் அன்பையே அடிப்படையாகக் கொண்டன என்பது வெளிப்படை.

மனிதனை மனிதன் நேசிக்க வேண்டும் என்பதற்காகவே இறைவன் பல இனமாகவும், நிறமாகவும் மனிதனைப் படைத்ததுடன் பல சமயங்களை உருவாக்கினான் எனக் கொள்ளலாம்." அவனல்லால் புவி மேலே ஒரு அணுவும் அசையாது" என்பதை நாம் மனதிலே கொள்ள வேண்டும். சமயங்கள் எல்லாமே ஆண்டவனை அடைய வழிகாட்டுவதனால் ஒவ்வொருவரும் அவரவர்க்குரிய சமய நெறிகளையே

பின்பற்ற வேண்டும். சமய மாற்றம் அவசியமற்றது என்பது பல பெரியோர்களின் கருத்து. ஸ்ரீ இராம கிருஸ்ண பரமஹம்சர் அவர்கள் இந்து சமய நெறி வழி ஒழுகிக் கடவுளை நேரில் கண்டவர் மாத்திரமல்ல அவருடன் உரையாடியவரும் கூட. அவர் கிறிஸ்தவ மத நெறிமுறைகளைப் பின்பற்றிப் பரம பிதாவையும் இஸ்லாமிய நெறிமுறைகளைப் பின்பற்றி அல்லாவையும் கண்டவர் ஆவார். அவர் அறிந்து கொண்ட பெரிய உண்மையானது மூன்று சமயங்களும் கூறும் கடவுளர் யாவரும் ஒருவரே என்பதும் அவ்வச் சமயக் கலாச்சாரங்கள் வழியே நாம் ஒழுகினால் எவரும் கடவுளைக் காண முடியும் என்பதாகும்.

கலாச்சாரம் என்பதற்குப் பண்பாடு எனவும் பொருள் உண்டு. எனவே மனிதனை மிகவும் பண்பட்ட ஒரு உயிரினமாக மாற்றுவதில் சமயக் கலாச்சாரங்களுக்குத் தனிப்பங்கு உண்டு. ஒருவர் எந்நிலையிலும் தமக்குரிய சமயக் கலாச்சாரங்களைப் பின்பற்றுவது வரவேற்கத்தக்கது. ஆறுமுக நாவலர் அவர்களைப் பீற்றர் பேசிவல் பாதிரியார் அவர்கள் வேலைக்கு அமர்த்திய காலத்தில் அவர் பின்வருமாறு கூறினார்." நான் சைவ சமயத்தவன். என்னை எக்கட்டத்திலும் மதம் மாறும்படி வற்புறுத்தக் கூடாது. நான் சைவ சமய கலாச்சாரப்படிதான் உடையணிந்து வேலைக்கு வருவேன். எப்பொழுதும் சிவ சின்னங்களான விபூதியையும் உருத்திராக்கத்தையும் அணிந்திருப்பேன். அதற்குச் சம்மதமானால் என்னை வேலைக்கு வைத்திருக்கலாம்" பாதிரியார் அவர்களும் அவ்வாறே அவரை வேலைக்கு அமர்த்தியதுடன் அவரிடம் தமிழ் கற்கும் சீடனாக இருந்ததுடன் பைபிளை மொழி பெயர்க்கும் பெரும் பணியையும் அவரிடம் ஒப்படைத்திருந்தார். இன்று தமிழில் எத்தனையோ மொழி பெயர்ப்புக்கள் இருந்தாலும் ஆறுமுக நாவலரின் மொழி பெயர்ப்பே சிறந்ததாகப் போற்றப்படுகின்றது.

இஸ்லாமியரின் கலாச்சாரமாகத் தொப்பி அணிதலும் ஐந்து வேளை தொழுகை நடத்துதலையும் கிறிஸ்தவர்களின் கலாச்சாரமாக ஞாயிற்றுக் கிழமை ஓய்வு நாளாக அனுஷ்டிக்கப்படுவதையும் அன்று தேவாலயம் சென்று இறைவனைத் தொழுவதையும் குறிப்பிடலாம். இன்று விஞ்ஞான வளர்ச்சி மேம்பட்டு மனிதன் வாழ்க்கை வசதிகள் பலவற்றையும் அனுபவிக்கும் நிலை ஏற்பட்டவுடன் சமயக் கலாச்சாரத்தைப் பின்பற்றும் மரபு குறைந்து வருவது வருந்தத்தக்கது. தனக்குரிய சமயக் கலாச்சாரத்தைப் பின்பற்றுவது இழிவானது எனும் தவறான கருத்துக்

கூட வலுவடைந்து வருவதைக் காணலாம். இவ்வாறான தவறான போக்கே இன்று உலகில் காணப்படும் பல பிரச்சினைகளிற்கு காரணம் எனலாம். எங்கு அன்பு வழி, சமய வழி மறுக்கப்படுகின்றதோ அங்கு அராஜகம், சண்டை தலை தூக்குகிறது.

இன்று எமது வாழ்வில் தனிமனித சுதந்திரம் பெரும் பங்கு வகிக்கின்றது. வைத்தியசாலையில் நாம் சிகிச்சை பெறும் நிலையில் கூட நமக்கு விரும்பிய வைத்தியரிடம் சிகிச்சை பெறவும் வைத்தியர்களால் தரப்படும் ஆலோசனைகளை நிராகரிக்கவும் எமக்கு உரிமை தரப்பட்டுள்ளது. எனவே சமய கலாச்சாரத்தைப் பின்பற்றுவதில் கூட நாமாக உணர்ந்து மனவிருப்பத்துடன் செயற்பட வேண்டுமே தவிர மற்றவர் வற்புறுத்தலிற்காக அதனைச் செய்தல் கூடாது. மற்றவரை வற்புறுத்தவும் கூடாது. சமீபத்தில் ஒரு இஸ்லாமியர் தமது மகள் பர்தா அணிந்து செல்வதை விரும்பாத காரணத்தால் அவளைக் கொலை செய்து விட்டதாகப் பத்திரிக்கைகளில் வெளியாகிய செய்தி எமக்கு அதிர்ச்சியூட்டக் கூடியதே. எனவே நாம் சமய வெறி கொள்ளாமல் சமயப்பற்றாளர் ஆகிச் சமய கலாச்சாரங்களைப் பின்பற்றி வாழ்ந்து நற்கதி அடைவோமாக.

சு.இராம கிருஸ்ணன்,
ஓய்வுபெற்றஆசிரியர்

**சத்தியத்தை விரும்புங்கள் ஆனால் தவறை மன்னித்து விடுங்கள்**

வால்டெர்

# சிறுவர் சிந்தனையிலிருந்து............

## கவிதைத் துளிகள்...



விடியாத இருளின் விடியல் ஒன்று

ஊழிகள் பலவாயினும் எங்கள்
குரல் வளைகள் நசியுண்டும்
உயிர் வாழும் நாங்கள் தான் பெண்கள்
கல்யாணச் சந்தையிலே
விலைபேசிக் கழிக்கப்பட்ட பெண்கள்
ஆதிக்க வெள்ளத்தின் அடியில் கிடந்து
பாதிக்கப்பட்டவள் நீதானே!
அஞ்சி நடக்கவும் மிஞ்சியதை உண்ணவுமா
வஞ்சியராய்ப் பிறந்தோம்? புறப்படு பெண்ணே!
கொஞ்சிக் குலாவும் வஞ்சியே!
அக்கினிச் சிறகசைத்து ஆகாயம் மீதெழுந்து
வீதியுலா வரும் புரட்சிப் பறவையே!
ஆவேசக் காற்றில் அடிபட்டுப் போகப்
பூவாக இருக்கலாமா?
புயலாக மாறு புதிய சகாப்தம் படைக்க
உன் புரட்சிகள் ஒவ்வொன்றும்
ஓர் சூரியப் பிரளயம்
பூமித் தேகத்தின் புல்லரிக்கும் நாடி நரம்புகள்
பூகோளத்தைப் புரட்டும் புழுதியின் கீதங்கள்
புல்லின் நுனியிலும் புதுமையின் பரவசம்
புல்லாங்குழலிலும் புரட்சியின் நாதங்கள்

அ. மரியலெபாயினி
தரம் - 8A
யா/புனித தெரேசா மகளிர் கல்லூரி

# நட்பு

வெளியே மழைத்தூறல் விடாமற் பொழிகின்றது
துளிகள் மனதைக் கழுவி நகர்ந்ததுவாய்ச்
சிலிர்க்கிறது மேனி! இடிகள் ரெண்டு எதையெதையோ
முழங்கி விவாதிக்க மின்னல்- - - - - விளக்கேற்றி
எதனையோ தேடுது? எழுந்து கொண்டேன்!
இம் மழைக்குள் - - - - - -
எந்தனுடன் நித்தம் இரவிரவாய்க் கதைக்கின்ற
விண்மீன்கள் நனைந்து விறைத்திடுமோ?
நடுநடுங்கிச் சன்னி பிடித்திடுமோ?
பாவம் அவை - - -
நட்பென்று எவருமற்ற தனிமைக் கொடுமையை
இல்லாதொழித்து எனக்கு முழு உதவி
செய்பவை அவ் விண்மீன்கள்:
அவையிப்போ நனைந்து விறைக்கையிலே
என்னென்று நான் பொறுப்பேன்?
இதோ நானும் நனைகின்றேன்- - - - -

வி. பிரதீபா
11A
யா/தும்பளை சி.ம.வி

எழுதுங்கள் வாசகர்களே!

இந்த அஞ்சலி என்ற சஞ்சிகை உங்களை வளர்ப்பதற்காகவே பிரசவிக்கப்படுகின்றது. எனவே உங்கள் ஆக்கங்களை வைகாசி 15ம் திகதிக்கு முன்பதாக எங்களிற்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் ஆற்றல் திறமைகளை வெளிக்கொணர்ந்து பேனாவிற்கு வேலை கொடுங்கள். உங்கள் பேனாவில் உள்ள ஒளி உங்கள் அக இருளையும் இவ் உலக இருளையும் அகற்றும்.

- ஆசிரியர் -

## ஓ! இளைஞனே - - - - -

சாதிக்கப் பிறந்த சாதனையாளன் - நீ
சோதனையில் துவண்டு விடாதே!
இன்றைய உலகைத் தாங்கும் தூண் - நீ
உறுதியை இழந்து விடாதே!
படித்துத் திளைக்கப் பிறந்தவன்- நீ
வீணாகத் துருப்பிடித்து விடாதே!

இன்றைய உலகம் தரும் நெருக்கடிகளைக்
கண்டு இடிந்து விடாதே!
உன் தோள்களின் ஆதரவிற்காய்
காத்திருக்கும் தம்பியர்கள் எத்தனையோ - - - - - -
உன் கரங்களின் சேவைக்காய்
காத்திருக்கும் எதிர்காலம்- - -

செழிப்பாக்க வருவாய் என்று காத்திருக்கும்
பிறந்த மண்ணும் - - -
பெருமை தேடித் தருவாய் என்று ஏங்கி நிற்கும்
தாய் நாடும் - - - - - -
முழுமை பெற உழைத்து விடு - - -
நாளைய வரலாற்றில் - நீ
நிலைத்து நிற்பாய்.



A. ரேக்கா,
J/ V. H. G. C,
11,
பருத்தித்துறை.

C4_0935

# அன்னையே!

உன்னிலிருந்து
என்னைப் படைத்த,
உன்னதமான உறவை,
உள்ளூர ஆதரித்து
உவகை கொள்கின்றேன்
உலகிலே
மேன்மையான,
உணவாகிய உந்தன்
உதிரத்தால்,
வளர்க்கப்பட்ட,
உத்தமமான உறவை,
உயிருள்ள வரையில் - - - - - -
உயிராய் நேசிப்பேன்.




கு. சுஜிதா
தரம் 8
யா/ மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை


திறமைதான் ஏழையின் நிரந்தரச் சொத்து
மாத்யூ ரைன்

நிதானத்தைக் கடைப்பிடி அதுவே வெற்றியின் முதற்படி
டெஸ்கார்ட்ஸ்

# பொது அறிவு

இலங்கையின் பிரதான தொழிற்சாலைகளும் ஆராய்ச்சி நிலையங்களும்

| | | |
|---|---|---|
| 1. | பிறிமா ஆலை | திருகோணமலை |
| 2. | இல்மனற் தொழிற்சாலை | புல்மோட்டை |
| 3. | உருளைக்கிழங்கு ஆராய்ச்சி நிலையம் | றங்கல |
| 4. | தேயிலை ஆராய்ச்சி நிலையம் | தலவாக்கொல்லை |
| 5. | இறப்பர் ஆராய்ச்சி நிலையம் | அகலவத்தை |
| 6. | தெங்குபொருள் ஆராய்ச்சி நிலையம் | வென்னப்புவ, லூனுவில |
| 7. | கைத்தொழில் விஞ்ஞான ஆராய்ச்சி நிலையம் | அங்குலானை |
| 8. | கமத்தொழில் ஆராய்ச்சி நிலையம் | குண்டகசாலை, மகா இலுப்பள்ளம் |
| 9. | கரும்பு ஆராய்ச்சி நிலையம் | அங்குன, பலஸ்ஸ |
| 10. | அரிசி உற்பத்தி ஆய்வு நிலையம் | அநுராதபுரம் |
| 11. | நெல் ஆராய்ச்சி நிலையம் | பந்தல கொட, கண்ணெருப |
| 12. | இரசாயன உப்புத் தொழிற்சாலை | பரந்தன் |
| 13. | பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் | சப்புகஸ்கந்த |
| 14. | மட்பாண்டத் தொழிற்சாலை | பிலியந்தல |
| 15. | காகிதத் தொழிற்சாலை | வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய. |

கி.யோ.கிருத்திகா
தரம் 8B
ய/ து.சி.ம.வி

உலகக் கோப்பை ( காற்பந்து ) வருடங்கள் - பெற்ற நாடுகள்

| | |
|---|---|
| 1930 | உருகுவே |
| 1934 | இத்தாலி |
| 1938 | இத்தாலி |
| 1950 | உருகுவே |
| 1954 | மேற்கு ஜேர்மனி |
| 1958 | பிரேசில் |
| 1962 | பிரேசில் |
| 1966 | இங்கிலாந்து |
| 1970 | பிரேசில் |
| 1974 | இங்கிலாந்து |
| 1978 | பிரேசில் |
| 1982 | மேற்கு ஜேர்மனி |
| 1986 | அர்ஜெண்டினா |
| 1990 | மேற்கு ஜேர்மனி |
| 1994 | பிரேசில் |
| 1998 | பிரான்சு |
| 1942, 1946 | ஆண்டுகளில் விளையாட்டு நடைபெறவில்லை. |

கி.யோ.தர்ஷனன்
தரம் - 11
ஹாட்லிக் கல்லூரி

பொறுமை உள்ளவனுக்கு அவன் விரும்பியதெல்லாம் கிடைக்கும்.
:பிராங்க்ளின்

எவ்வளவு கல்வியும் செல்வமும் இருந்தாலும் அடக்கம் இல்லாவிட்டால் பண்பாடு இல்லை.
ராஜாஜி

# சிந்தனைத் துளிகள்

சில நேரங்களில் முட்டாளாய் இருப்பது புத்திசாலித்தனம்

உழைக்காதவன் கையில் தங்கமும் அழுக்கு, உழைப்பவன் கையில் அழுக்கும் தங்கம்

இன்பத்தை இரண்டாய்ப் பார், துன்பத்தைப் பாதியாய்ப் பார்.

பதட்டத்தில் மனிதன் பாதி பலம் இழக்கின்றான்.

கொடுப்பவருக்கு உயிரும் பொருட்டல்ல.

பணத்தை வீட்டில் நுழைய விடு ஆனால் மனத்தில் நுழைய விடாதே.

கீழ்படியக் கற்றுக்கொள் பிறகு கட்டளையிடு, பதவி உனக்குத் தானாகவே வரும்.

பெரிய நெருக்கடிகளில் தான் இறைவன் வெற்றியின் வழிகளை வைத்துள்ளான்.

அன்பின் ஆழம் எவ்வளவு என்பதைப் பிரிவின் போதுதான் உணர முடியும்.

ஆண்டவன் உன்னுடைய ஜாதியையும், பிறப்பையும் கேட்கமாட்டான். அவன் உன்னிடத்தில் கேட்பதெல்லாம் நீ பூமியில் என்ன செய்தாய் என்பதை மட்டும்தான்.

ச.லாவண்யா,
J/ V. H. G. C,
11A,
பருத்தித்துறை,

# உலக அதிசயங்கள்

## பண்டைய உலக அதிசயங்கள்

1. எகிப்தின் பிரமிட்டுக்கள்
2. எ.்.பிஸ்ஸில் இருந்த ஆர்ட்டிமிஸ் ஆலயம்
3. ஹேலிகார்னஸிஸ்ஸில் இருந்த கல்லறை மடம்
4. அலெக்ஸாந்திரியாவில் இருந்த ஃபாரோஸ் கலங்கரை விளக்கம்
5. பாபிலோனியாவின் தொங்கும் தோட்டம்
6. ஒலிம்பஸ்ஸிலிருந்த ஜியூஸ் சிலை
7. ரோட்ஸில் இருந்த பேருருவச் சிலை (கொலாஸஸ் )

## இடைக்கால உலக அதிசயங்கள்

1. ரோமின் கொல்லோசியம் அரங்கம்
2. நான்கிங்கின் பீங்கான் கோபுரம்
3. இங்கிலாந்தின் ஸ்டோன் ரிஹஞ்சல எனப்படும் மனிதப் புதைவிடக் கற்கள்
4. பைசா நகரத்துச் சாய்ந்த கோபுரம்
5. சைனாவின் பெரிய சுவர்
6. கான்ஸ்டாண்டிநோபிளின் புனித சோபியா மசூதி
7. அலெக்ஸாந்திரியாவின் அடிநிலக் கிடைவுக் கல்லறைகள்

## நவீன உலக அதிசயங்கள்

1. ஆக்ராவில் உள்ள தாஜ்மகால்
2. பாரீஸில் உள்ள ஜ.்.பிள் கோபுரம்
3. டிஸ்னிலாந்து
4. பிக்பென் கடிகாரம்
5. அமர்ந்த பனி லிங்கம்
6. லிபர்ட்டி சிலை அமெரிக்கா
7. சீனாவின் மலர்த் தோட்டம்

கா.கீர்த்திகா,
தரம் 11,
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

# கல்வி

ஒருவன் பெறும் செல்வங்களுள் கல்விச் செல்வமும் ஒன்றாகும். கல்வி வெள்ளத்தால் அழியாதது, வெந்தழலால் வேகாது, வேந்தராலும் கவர முடியாதது. கொடுக்கக் கொடுக்கக் குறையாதது. கள்வரால் கவர முடியாதது என்று கூறுகின்றார் மறைமலை அடிகளார். கல்வியாகிய அழியாச் செல்வத்தை நாம் பெற்றுக்கொள்ளுதல் அவசியமாகும். திருவள்ளுவர் கற்றார் கண்ணிரண்டு உடையார், கல்லாதார் முகத்திரண்டு புண்ணுடையார் என்கின்றார். கல்வி கற்றவர்களிற்கு இந்த உலகில் மதிப்புண்டு அவர்கள் யாவராலும் மதிக்கப் பெறுவார். ஔவையார் கற்றோரிற்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு என்கின்றார். இதற்கு ஒரு அரசனை ஒப்பிட்டுக் கூறுவதைக் காணலாம். மன்னனிற்குத் தன்னுடைய தேசத்தில் மட்டும் சிறப்பு உண்டு. கற்றோரிற்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு உண்டாம்.

கல்வியை நாம் பெற்றுக்கொள்வதனால் பெரும் பயன்களைப் பெறுகின்றோம். நாம் நாட்டில் ஓர் நற்பிரஜையாக வாழவும் நல்ல ஒழுக்க வீரர்களாவதற்கும் கல்வி வழிகாட்டுகின்றது. ஒரு சபையில் நன்மதிப்போடு பேசவும் கருத்துக்களைப் பரிமாறவும் கல்வி வழிகாட்டுகின்றது. ஒரு தொழிலைத்தேடிச் செல்வத்தைப் பெருக்க ஊன்றுகோலாகின்றது. இவ்வாறு பலபல நன்மைகளைத் தருவது கல்வி ஆகும். கல்வியைக் கற்பதனால் நாம் உயர்ந்தவர்களாக மதிக்கப்படுகின்றோம். கல்வியறிவுடையவர்களை நாலடியாரில்

"குஞ்சி அழகும் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாம் என்னும் நடுநிலைமையாகக்-
கல்வி அழகே அழகு."

என்று குறிப்பிடப்படுகின்றது. எனவே கல்வி அழகே எல்லாவற்றிலும் மேலான அழகாகும்.

"கற்கக் கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற ஆன்றோர் வாக்கிற்கமைய கல்வியைப் போற்றி உலகம் போற்றும் உத்தமராக வாழ்வோம்.

கற்கை நன்றே கற்கை நன்றே.
பிச்சை புகினும் கற்கை நன்றே.

கா. கிருஷாலினி,
தரம் - 7A,
யா/ தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம்.

# மது விலக்கு

உணர்வுகளை மயக்கி எமக்கு மயக்கத்தைத் தருவன மதுபானம். இந்த மதுப்பழக்கமானது இன்று நேற்று மட்டுமல்ல பண்டைய காலந்தொட்டே இருக்கின்றது. இப்பழக்கவழக்கத்தில் ஈடுபடுபவர்கள் மனக்கவலையைப் போக்க, உடற்களைப்பைப் போக்க, பழகிவிட முடியாதவர்களும் உள்ளனர். எல்லாத் தீய பழக்க வழக்கங்களிற்கும் ஊன்றுகோல் மது ஆகும். அதனை விலக்குவது தலையாய கடமையாகும்.

மது ஒரு மனிதனை சமுதாயத்திலிருந்து அப்புறப்படுத்திவிடும். மது உண்பவர்களைக் குடிகாரன், வெறிகாரன் என்று சமூகம் ஒதுக்கிவிடும். அதுமட்டுமல்லாமல் உயர்ந்தோர் கூட வெறுப்பார்கள். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் கூட ஒதுக்கி வைப்பார்கள். இதனாலேதான் "ஈன்றால் முகத்தேயும் இன்னாதல் என்மற்று சான்றோர் முகத்துக் களி" எனத் திருவள்ளுவர் கூறியுள்ளார். அன்பின் பொக்கிசமான அன்பின் பிறப்பிடமாகிய தாயானவள் தனது மகன் பஞ்சமாபாதச் செயல்களில் ஈடுபடுகிறான் என்று தெரிந்தாலும் சமுதாயத்துக்கு மறைப்பாள். ஆனால் உனது மகன் குடித்து விட்டு அங்கே கிடக்கிறான் என்றால் உடனே அவள் முகம் கறுத்து வாடி வதங்கி காணப்படும்.

மது பாவனை ஏற்படின் அவன் உடல் வலுவிழந்து நோயுள்ளவனாகி விடுகிறான். மற்றும் பொருள் இழந்து, குடும்பம் இழந்து சோம்பல்காரனாக மாறி கடைசியில் திருடனாக மாறுவதற்கு இதுவே வழிகோலுகிறது. அன்றும் இன்றும் அரசாங்கம் மதுபானத்தை தடைசெய்ய வேண்டும் என்றார்கள். ஆனால் மதுவை முற்றாக ஒழிக்கவில்லையே! அனுமதிப்பத்திரம் வைத்திருப்பவர்கள் மட்டும் விற்கலாம் என்ற நடைமுறையின் மூலம் அனுமதிப்பத்திர காசாக பெருந்தொகையே அறவிடுகின்றது. இதுவா அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை? மற்றும் எங்கு பார்த்தாலும் கள்ளச்சாராயம் காய்ச்சி விற்பவர்கள் பெருகிக்கொண்டு செல்கிறார்களே தவிர அதை ஒழிக்க வேண்டும் என்று வெறும் வாயால் மாத்திரமே கூறுகின்றார்கள் போலிருக்கு. கள்ளச்சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடித்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்த பின் நீதிபதி தீர்ப்பு சொல்கின்றார். அவர் என்ன நியாயமான முறையிலா சொல்கின்றார்?. குறைந்த மாதங்களே

சிறைத்தண்டனை, ஆனால் அபராதமோ அதிகம். இப்படிப்பார்த்தால் பணம் இருக்கும் தைரியத்தில் எவ்வளவு தப்பு வேண்டுமென்றாலும் செய்வார்கள். ஆகவே இந்நாட்டின் முக்கிய வளர்ச்சிக்குப் பங்காற்ற வேண்டுமென்று நினைத்தால் இன்றிலிருந்து இந்த மதுவை ஒழிக்க நடவடிக்கை எடுங்கள்.

இன்று வைதியசாலைக்குச் சென்று நாம் நோக்குவோமாயின் அங்கிருக்கும் நோயாளிகளில் 85% மானோர் மதுபழக்கவழக்கத்தினால் நோயாளியாக இருக்கின்றனர். இன்று எல்லா மதங்களும் மதுவிலக்கைப் பற்றியே கூறுகின்றன. அரசாங்கம் கூட தடையான சொற்பிரயோகங்களைப் பாவிக்கின்றன. மதுப்பிரியர்களும் விட்டபாடில்லை. “கள்ளுண்ணா போதுல்- - - - - - -” என்று பொய்யாமொழிப் புலவர் கூறுகின்றார்.

ஒருவன் நன்றாக மது அருந்திவிட்டு தெருவில் விழுந்து அலங்கோலப்படுவதை சமூகம் பார்த்து ஏளனம் செய்யும் போது, “ஐயகோ” இது மாதிரியன்றோ நேற்று சமூகம் ஏளனம் செய்தது என்று அவன் மனவேதனைப்படுவான். ஆகவே உலகப் பெரியார்களாகிய மகாத்மாகாந்தி போன்றவர்களின் வாழ்வின் எடுத்துக்காட்டுக்களை உணர்ந்து மதுவை விலக்க வேண்டும். செல், மற்றும் பீரங்கிகள் எதிரே நின்று தான் நம்மை அழிக்கின்றது ஆனால் மதுவோ உடலின் உள்ளே சென்று கொஞ்சம் கொஞ்சமாக கொல்கிறது. இப்படியான மது நமது வாழ்க்கைக்கு தேவையில்லை என்று அதனோடு எதிர்த்து போராடுவோமாக!

ர. லாவண்யா
11 C
யா/ வடமராட்சி இந்து மகளிர்

காலத்தின் மதிப்புத் தெரிந்தால்தான் வாழ்க்கையின் மதிப்புத் தெரியும்.

நெல்சன்

## *கிறிஸ்தவமும் தமிழும் ஓர் உரையாடலுக்கான முன்னுரை.*

தமிழ் இன்று செம்மொழியாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. தமிழ் மொழியின் வளர்ச்சிப் போக்கில் பல மதங்களைச் சேர்ந்தவர்களும் தங்கள் பங்களிப்பை வழங்கியுள்ளனர். தமிழ் அவர்களின் வேற்றுமைகளை மறக்கச் செய்து தன்பால் ஒன்றிணைத்துள்ளது. நாம் இங்கு கிறிஸ்தவம் தமிழிற்குச் செய்த பங்களிப்பைப் பார்ப்போம்.

ஓசை பெற்ற கல்லை நீர் உடைத்துருக்கள் செய்தீர்
பூசை பெற்ற கல்லிலே பூவும் நீருஞ் சாற்றுவீர்
வாசலிற் பதித்த கல்லை மழுங்கவே மிதிக்கிறீர்
ஈசனுக்குகந்த கல்லிரண்டு கல்லுமல்லவே.

என்கின்ற சிவ வாக்கியாரின் பாடலுடன் ஏசாயாதீர்க்க தரிசன நூலின் சில வசனங்களை ஒப்பிட்டுப் பார்ப்போம்.

" தச்சன் உளியால் ஓர் சிலை செதுக்கி அதன்முன் தெண்டனிடுகிறான். அதில் பாதியை அடுப்பெரிக்கிறான். மற்றொரு பாகத்தைப் பயன்படுத்தி இறைச்சி சமைத்துச் சுவையான உணவுப் பொருட்களை தயாரித்து வயிறாரச் சாப்பிடுகிறான் பின் குளிர் காய்கிறான். நன்றாக காய்ந்தேன் நல்ல தீ வளர்த்தேன் என்று சொல்லிக் கொள்கிறான். மீதியைக் கொண்டோ தனக்கொரு தெய்வமாகச் சிலை செதுக்கி என்னை மீட்டருளுக ! என மன்றாடுகின்றான்". (ஏசாயா44:16-17)தமிழ் சித்தர் மரபும் விவிலியமும் ஒன்றோடு இணைந்து செல்வதைப் பார்க்க முடிகின்றது.

இது மாத்திரம் அல்ல பட்டினத்தாருடைய"சொல்லிலும் சொல்லின் முடிவிலும் " எனத் தொடங்கும் பாடலையும் விவிலியத்தல் இடம்பெறும் சங்கீதம் 96:5-6 இன் கருத்தையும் இணைத்துப் பார்க்கலாம்.சமஸ்கிருதம்தான் இந்திய மொழிகளிற்கெல்லாம் மூல மொழி என்ற தவறான கருத்தினை மறுத்து" திராவிட மொழிக் குடும்பம்" என்ற கருத்தாக்கத்தை உலகிற்கு முதலில் உணர்த்தியவர் பிரான்சிஸ் ஓயிட் எல்லீன் (Francis whyte ellis - 177-1819)அவர் எழுதிய நூலின் பெயர் "Grmmar of the teloogoo-language" சென்னையில் 1816ல் வெளியிடப்படுகின்றது. " இந்நூல் வெளிவந்து நாற்பது ஆண்டுகளின் பின் 1856 ல் கால்டுவெல் எழுதி வெளியிட்ட "திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்" என்ற அரிய நூல் வெளிவருகின்றது. திரு. எல்லீன் திருக்குறளையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்கிறார். திருக்குறளை ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்த கிறிஸ்தவர்கள் 1784 kindersley : 1812 Ellis: 1840 Drew : 1871 Gover 1878 Robin son: 1886 Drew + Lazarus : 1886 G-u-pope முனைவர் கு. இன்னாசியவர்கள். கிறிஸ்தவம் சார்ந்தோர் 13

மொழிகளில் 43 மொழிபெயர்ப்புக்களை செய்துள்ளனர். அவை மலாய், சிங்களம், பிஜி, செக், டச்சு, ஆங்கிலம், பின்னிஸ்', பிரெஞ்சு, ஜெர்மனி, இலத்தீன், ர்'ஷ்யன், ஸ்வீடிஷ், இத்தாலி ஆகிய மொழிகளில் உள்ளன என்கின்றார் தனது கிறிஸ்தவமும் தமிழும் எனும் நூலில்.

ஜி.யூ போப் நாலடியாரையும் திருவாசகத்தையும் பரிதிமாற்கலைஞரின் தனி பாசுர திரட்டையும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்கின்றார். வெற்றிவேட்கை வில்லியம் டெய்லரும், தத்துவக்கட்டளை சிவஞான போதம், சிவப்பிரகாசம் ஹென்றி சிச்சாட்ஹேயிங்ஸ்ரனாலும் ஐங்குறுநூறு பேராசிரியர் சோதிமுத்துவாலும் ஆங்கிலத்தில் மொழியாக்கம் செய்யப்படுகின்றது.

ஔவையார் பாடல்களை பிரஞ்சில் ஏரியல் மொழியாக்கம் செய்கின்றார். கைவல்யம், நவநீதம், பஞ்சதசபிரகரணம், ஆத்மயோதபிரகாசிகை ஆகியவை கார்ல்கிரால் என்பவரால் ஜெர்மனியிலும் மொழியாக்கம்
செய்யப்படுகின்றது.

கருணாமிர்தசாசுரம் என்கின்ற தமிழ் இசை பற்றிய 1346 பக்கங்களைக் கொண்ட நூலை ஆப்பிரகாம் பண்டிதர் தமிழ் இசை உலகிற்கு அளிக்கின்றார். கம்பர் தம் 12016 பாடல்களில் 87 சந்த வேறுபாடுகளை பயன்படுத்தினார். யான்தோம் பாவணியின் 3615 பாடல்களில் 90 சந்த வேறுபாடுகளைப் புகுத்தியிருக்கின்றேன் என்கின்றார் வீரமாமுனிவர். தமிழ் இசையுலகிற்கு கிறிஸ்தவர்களின் பங்களிப்பு கணிசமாக உள்ளது. பள்ளு என்னும் இலக்கிய வடிவம் தமிழில் வாய்மொழி இலக்கியத்தில் தோன்றியது. பள்ளு இலக்கிய வடிவத்தில் முதலில் படைக்கப்பட்டது முக்கூடல் பள்ளு என்று இலக்கிய வரலாற்று ஆசிரியர்கள் கூறிகின்ற பொழுதும் வேறு சிலர் செம்பக ராமன் பள்ளு என்னும் கிறிஸ்தவ நூலே முதல் பள்ளு நூலாகும் என்று முனைவர் இன்னாசி தனது PERSPECTIVES IN TAMIL LANGUAGE AND LITERATURE : P 15 : 16 கூறுகின்றார்.

ஈழத்தில் தோன்றிய ஞானப்பள்ளுதான் முதலில் தோன்றிய பள்ளு என்றும் கூறுகின்றனர். ஞானப்பள்ளு யேசுநாதரைப் பாட்டுடைத்தலைவராகக் கொண்டு 257 செய்யுட்களால் பாடப்பட்டுள்ளது. ஆனால் ஆசிரியரின் பெயர் தெரியவில்லை. ஆனால் "பாராலும் பிடுற்றுக் கால்" என வரும் அடிகளின் மூலம் போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இது பாடப்பட்டதாக கொள்ளப்படுவதினால் கி.பி 1621-1658 க்கும் இடைப்பட்ட காலமாக கொள்ளப்படுகின்றது. 1577இல் இயேசு சங்கத்தை சேர்ந்த ஹென்றிக்ஸ(H-HENRIGUS)என்பவர் கொல்லத்தில் 16 பக்கங்கள் கொண்ட "DOCTRINACHRISTAM" என்ற போத்துக்கேய பெயர் கொண்ட ஒரு வினாவிடை நூலை வெளியிட்டார். இதுவே தமிழின்

முதல் அச்சு நூலாகும் என்கின்றார் முனைவர் மோசசு மைக்கேல் பாரடே இதே நூல் சற்று விரிவுபடுத்தி 112 பக்கங்களோடு இவரே 1579ல் வெளியிட்டார். இதைத் தொடர்ந்து ஐரோப்பிய அருட்தொண்டர்கள் 18ம், 19ம் நூற்றாண்டுகளில் பல்வேறு வெளியீட்டுக் கழகங்கள் மூலம் தொடர்ந்து நூல்களை தமிழகத்தில் வெளியிட்டு வந்தனர்.

முதல் முதலாக விவிலியத்தின் புதிய ஏற்பாட்டின் முதல் மொழி பெயர்ப்பு 1715 ல் தான் வெளியிடப்பட்டது என்கிறார் இரா.எட்வர்ட் சாம் மலரும் திருமறை என்னும் தன் நூலில். ஆனால் பேராசிரியர் ஆ. சிவசுப்பிரமணியம் விவிலியத்தின் முதல் தமிழ் மொழி பெயர்ப்பாளர் அண்ரிக அடிகளார் தான் 1586என்று முன் வைக்கின்றார் தன் கருத்தை. தரங்கம்பாடியில் கிறிஸ்தவ பணி செய்த பர்த்தலோமேயு சீகன் பால்கு என்பவரால் 1751ல் மொழியாக்கம் செய்யப்பட்ட புதிய ஏற்பாடு வெளியிடப்படுகின்றது. தொடர்ந்து 1725ல் மறைதிரு பெஞ்சமின் சூல்ச் என்பவர் பழைய ஏற்பாட்டை மொழி பெயர்க்கும் பணியை நிறைவு செய்தார்.

தொடரும்.........

இ.து.குலசிங்கம

## *வாழ்க்கையின் விதி*

வாழ்க்கை ஒரு சவால் அதனை சந்தியுங்கள்
வாழ்க்கை ஒரு பரிசு அதனை ஏற்றுக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சாகசப் பயணம் அதனை மேற்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு சோகம் அதனைக் கடந்து வாருங்கள்
வாழ்க்கை ஒரு துயரம் அதனைத் தாங்கிக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு கடமை அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு விளையாட்டு அதனை விளையாடுங்கள்
வாழ்க்கை ஒரு வினோதம் அதனைக் கண்டறியுங்கள்
வாழ்க்கை ஒரு பாடல் அதனைப் பாடுங்கள்
வாழ்க்கை ஒரு சந்தர்ப்பம் அதனை பயன்படுத்திக்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு உறுதிமொழி அதனை நிறைவேற்றுங்கள்
வாழ்க்கை ஒரு காதல் அதனை அனுபவியுங்கள்
வாழ்க்கை ஒரு அழகு அதனை ஆராதியுங்கள்
வாழ்க்கை ஒரு உணர்வு அதனை உணர்ந்துகொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு போராட்டம் அதனை எதிர்கொள்ளுங்கள்
வாழ்க்கை ஒரு குழப்பம் அதற்கு விடைகாணுங்கள்
வாழ்க்கை ஒரு இலக்கு அதனை எட்டிப்பிடியுங்கள்

## கோபம் கொள்வது குற்றமா?

அறிவு உன் தந்தையாய்
அன்பு உன் அன்னையாய்
அறம் உன் சகோதரனாய்
பொறுமை உன் மனைவியாய்
பண்பு உன் மகளாய்
ஆண்மை உன் மகனாய்
இக்குடும்பத்தோடு சேர்ந்து வாழ்ந்தால்
கோபம் கொள்ளாக் குணக்குன்றாய் நாமும் வாழலாம்.

உலகில் ஏனைய விடயங்களிலும் பார்க்க சம்பாதித்து வைத்திருப்பது நற்பெயர் ஒன்றுதான். அது தான் மிகவும் உயர்ந்தது என்று கூறுவார்கள். ஒரு மனிதனின் நற்பெயர் அவன் இருட்டில் இருந்தாலும் ஒளி வீசும். ஆகையால் பொன்னை, பெண்ணை, மண்ணைக்காட்டிலும் நாம் பெரிதெனப் போற்றுவது நமக்கிருக்கும் நற்பெயரை மட்டும் தான். நற்பெயரை நாம் எவ்வாறு சம்பாதிப்பது. முதலில் நாம் நமக்கென்று சில உயர்ந்த நோக்குகள் இலட்சியங்களை எம் மனதில் பதிக்க வேண்டும். நாம் பிறரிற்கு உதவும் நோக்காளர்களாக நேர்மையாளர்களாக நீதியானவர்களாக இருப்போமாகில் நற்பெயர் நம்மைத் தானாக வந்து சேரும்.

இவ்வாறான நற்பெயரைப் பெறுபவர்கள் அதனை தம் வாழ்நாள் முழுவதும் காப்பாற்றிக்கொள்ள வேண்டிய விதத்தில் நடந்து கொள்ள வேண்டும். நற்பெயருக்கு பங்கம் விளைவிக்கும் விதத்தில் எந்த ஒரு செயலையும் செய்து விடக்கூடாது. நற்பெயரைக் கொண்டு இருப்பவர்கள் சென்ற இடமெல்லாம் மதிப்பும் மரியாதையும் கிடைக்கும். நற்பெயரை நாம் காப்பாற்ற வேண்டுமாயின் பிறரை நாம் மதிக்க வேண்டும். அப்போதுதான் அவர்களும் மதிப்பார்கள். அதற்காகப் போலிகளிற்கு மதிப்பளிக்கலாகாது. போலி எது? நல்லது எது? என்பதைப் புரிந்து நல்லதைத் தேர்ந்தெடுக்கும் திறன்கூட நற்பெயரை அடைவதில் ஓர் அம்சமாகும்.

யாரைப்பற்றியும் ஒரு கருத்தைக் கூறும்போது அக்கருத்து பிறரின் வாழ்வில் ஏதும் விளைவுகளை ஏற்படுத்தக்கூடியதா? என்பதை நாம் முதலில் சிந்திக்க வேண்டும். தீயினால் சுட்ட புண் ஆறும், ஆறாது நாவினால் சுட்ட வடு. இப்பழமொழி ஓர் பெரிய மனோவியல் உண்மையை உணர்த்தி நிற்கின்றது. ஒரு சிறிய கடை வைத்திருப்பவர்

மிகவும் கோபம் உள்ளா். அவா் எந்நேரமும் இறைவனை நேரில் பார்க்க வேண்டும் என்ற சிந்தனையிலும் பக்தியிலும் திளைத்திருந்து இறைவனை நேரில் தரிசிக்கும் முயற்சியில் சதா ஈடுபட்டிருந்தார். அப்படி இருக்கும் நேரத்தில் அவா் கடைக்கு ஒரு பிச்சைக்காரன் தொடர்ச்சியாக வந்து பிச்சை கேட்பான். இவா் அவனைத் துன்புறுத்தி கலைத்து விடுவார். இவ்வாறிருக்க இறைவன் ஒரு நாள் அவா் கனவில் வந்து நான் நித்தம் உன்னைக்காண பிச்சைக்கார வடிவில் வந்தேன் உன்னிடம் குடி கொண்ட கோபம் என்னை அடித்துத் துரத்துகின்றது. என்று அந்த கோபம் என்னும் மாயையை தொலைக்கின்றாயோ அன்றுதான் நீ என்னைக் காண்பாய் என்றார். கனவில் கூறிய வாசகங்கள் அவரை அவா் உயிர் உள்ளவரை வாட்டி வதைத்தது.

மு. இராசேந்திரம்,
தும்பளை,
பருத்தித்துறை.

## வேண்டாம்

பணிவில்லாப் பண்பு வேண்டாம்
பொய்யான உள்ளம் வேண்டாம்
மன்னிக்கா மனம் வேண்டாம்
பகைமையான பாசம் வேண்டாம்
நன்றியில்லா நட்பு வேண்டாம்
உதவா உள்ளம் வேண்டாம்
வறுமையான வாழ்வு வேண்டாம்
அடக்கமில்லா அமைதி வேண்டாம்
சமாதானமில்லா சமூகம் வேண்டாம்

# பொது அறிவுப் போட்டி

01. உலகில் அதிக மக்களால் பேசப்படும் மொழி எது?
02. மனிதக் குண்டு வெடிப்பொன்றில் கொல்லப்பட்ட இலங்கையின் தலைவர் யார்?
03. அமெரிக்கா வானில் பவனிவர விட்டிருக்கும் விண்வெளித் தொலைக்காட்டி எது?
04. தமிழ்மொழி பேசும் மக்களின் எண்ணிக்கை எவ்வளவு?
05. சாரண இயக்கத்தின் தந்தை யார்?
06. குளோனிங் முறை மூலம் டாலி செம்மறியாட்டுக்குட்டியை உருவாக்கிய விஞ்ஞானி யார்?
07. விண்வெளியின் முதலாவது சுற்றுலாப்பயணி யார்?
08. சுவிங்கம் ஆரம்பத்தில் எம்மரத்தின் பசையிலிருந்து செய்யப்பட்டது?
09. விலங்குப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் வேட்டையாடுவதற்குத் தடை செய்யப்பட்ட முதலாவது கடலுயிர் எது?
10. மே மாதத்தின் இரண்டாவது ஞாயிறு உலக தினங்களில் எது?

உங்களுடைய விடைகளை எதிர்வரும் வைகாசி மாதம் 5ம் திகதிக்கு முன் கீழ்க் குறிப்பிட்டுள்ள முகவரிக்கு எழுதி அனுப்புங்கள். குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் மூன்று அதிஷ்டசாலிகளிற்கு பரிசில்கள் காத்திருக்கின்றன. வெற்றியாளர்களின் பெயர் விபரம் அடுத்த இதழில்.

| | |
|---|---|
| "அஞ்சலி" | பெயர் -------------- |
| அஞ்சலி அகம், | முகவரி -------------- |
| நெல்லண்டை வீதி. | தரம் -------------- |
| தும்பளை. | பாடசாலை-------------- |
| பருத்தித்துறை. | |

மாணவர்களிற்கு மட்டும்.

**தோழமையுடன் தோழனே தோழியே ! நீ தேடும் அமைதியும் நிம்மதியும் உனக்குள்ளே இருக்கின்றது.**

வேலு என்ற வயோதிபர் வாழ்நாளில் பல வருடங்களாக தனது வீட்டில் அமைதியும் நிம்மதியும் கிடைக்கவில்லை என்பதை உணர்ந்து புத்தகங்களைப் படித்தார், தொலைக்காட்சியில் படங்களைப் பார்த்தார், தியானம் செய்தார், அப்போதும் அமைதியும் நிம்மதியும் கிடைக்கவில்லை. தனது வீட்டை விட்டு கிராமத்திற்கு வந்து ஒவ்வொரு இடமாக சென்று பார்த்தார் அங்கேயும் இல்லை. நாட்கள் கிழமைகளாகி................ கிழமைகள் நகர்ந்து மாதங்களாகி..................மாதங்கள் நகர்ந்து வருடங்களாகி............. விட்டன. களைத்துப் போன அவர் மக்கள் இல்லாத இடத்தில் ஆலமரத்தின் கீழ் சிந்தித்தவாறு இருந்தார் அங்கேயும் கிடைக்கவில்லை. அச்சமயம் அவ்வழியால் ஞானி ஒருவர் வந்து கொண்டிருந்தார். அவ்வேளை அந்த வயோதிபர் மிகவும் சத்தமாக நான் தேடியது எங்கே கிடைக்கும்? எங்கே கிடைக்கும்? என்றவாறு கத்தினார். ஞானி வயோதிபர் அருகே சென்று அமர்ந்தார். ஞானியைப் பார்த்த வயோதிபர் அவரின் சால்வையை இறுகப் பிடித்து நான் தேடிய அமைதியும் நிம்மதியும் எங்கே கிடைக்கும் என்று கத்தினார். ஞானி நீ தேடிக்கொண்டிருக்கும் அமைதியும் நிம்மதியும் உனக்குள்ளே இருக்கு என்று கூறினார். இதைக் கேட்டு அதிர்ச்சியடைந்த வயோதிபர் உடனே இறந்து விட்டார்.

தோழனே! தோழியே! நாமும் உயிரோடு வாழும் நாட்களில் அமைதியையும் நிம்மதியையும் காண வேண்டும் என விரும்புகின்றோமா..........?

நாம் பிறரைப் பற்றி கெடுதியாக, இழிவாக நினைக்கிறவற்றை, பிறரைவிட என்னை உயர்வாக எண்ணுவதை அதாவது சுயநலம், பெருமை, அகந்தை போன்றவற்றை எம்மிடமிருந்து அகற்றிவிட ஆயத்தமாக இருக்கிறோமா- - -- - - -?

வன்செயல்கள், கட்டுக்கடங்காத வெள்ளாடு போன்ற முரட்டுத்தன்மை, ஒழுங்கு பண்பாடு போன்றவற்றை மதியாமல் மனிதனை மனிதனாக மதிக்காமல் அவனுக்குக் கண்ணாடிப் போர்வைகளைப் போட்டு பார்த்து வருகின்றோம். மனிதன் தானே

தன் உயிரை அழிக்க உரிமை இல்லாதவனாக இருக்கின்ற போது நாம் மற்றவரின் உயிரை அழித்துக் கொண்டும், அழிப்பதற்கு முயற்சி எடுத்தும் வருகின்றோம். நாம் இவ்வாறான செயல்களிலிருந்து விடுபட தயாராக இருக்கின்றோமா?

அசுத்தமான கதைப்புத்தகங்களைப் படிக்கின்றோம், படங்களைப் பார்க்கின்றோம், புகைப்பிடித்து, மதுபானம் அருந்தி உள்ளத்தை கெடுத்து விடுகின்றோம். பன்றி அருவருப்பானவைகளை தின்பது போல அசுத்தமான செயல்களில் ஈடுபட்டு வருகின்றோம். காங்கோ என்ற பகுதியிலுள்ள சில வகை தவளைகள் எறும்புகளைக் கண்டால் பேராசையுடன் ஏராளமாகத்தின்றுவிட்டு வெடித்து இறந்து போகுமாம். எனவே நாம் பேராசைகள் பலவிதமான இச்சைகள் போன்றவற்றை எம்மிடமிருந்து அகற்றிவிட ஆயத்தமாக இருக்கின்றோமா? எம்முடைய இதயத்தில் பொறாமை வஞ்சகம் இருக்கின்றது என்று சொன்னால் ஒப்புக்கொள்ள மாட்டோம். ஆனால் எம்முடைய இதயத்தில் இக் கொடிய குணங்கள் பாம்பைப்போல ஒழிந்துள்ளது. சமயம் வரும்போது ஊர்ந்து வந்து செயல்படும். பாம்புக்கு பாலூற்றி வளர்ப்பதைப் போன்று பொறாமை வஞ்சகம் போன்ற குணங்களை உள்ளத்தில் வளரவிடுவது, கடுமையாகக் கோபப்படுவது, எமக்கு தீமை செய்த யாரையாவது பழிக்கு பழிவாங்குவது போன்ற குணங்களை எம்மிடமிருந்து நீக்கிவிட தயாராக இருக்கிறோமா?

இவையெல்லாம் எம்மிடமிருக்கும்போது எப்படி அமைதியையும் நிம்மதியையும் நாம் காணலாம்? எனவே நாம் இவற்றையெல்லாம் நமது வாழ்விலிருந்து அகற்றிவிட்டு நாம் பின்வருவனவற்றைக் கடைப்பிடிக்க தயாராக இருக்கிறோமா?

மக்கள் பல்வேறு அளவினராகவும் நிறத்தினராகவும் வெவ்வேறு நிலைமையில் இருப்பவராகவும் காணப்படுகின்றனர். ஆனால் நம்மைப் படைத்த பரம்பொருள் பாரபட்சம் காட்டுவதில்லை என்பதை நினைவில் வைத்து பாரபட்சம் காட்டாது எவரையும் ஒதுக்கித்தள்ளாது வாழ ஆயத்தமாக இருக்கிறோமா?

ஒரு எதிரியை எதிரியாகப் பார்ப்பதைவிட சிறப்பான வழி அவரை உங்கள் நண்பராக்கி கொள்வதாகும் என்று ஆபிரகாம் லிங்கன் கூறியிருக்கிறார். எனவே நாம் எதிரிகளை நேசித்து தீமைக்குப் பதிலாக நன்மை செய்து மனிதனை மனிதனாக மதித்து

எங்களுடைய உணர்வுகளையும் தேவைகளையும் மற்றவர்களின் உணர்வுகள் தேவைகளுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது அங்கே பரிவு, இரக்கம், கருணை உடைய அன்பு என்ற பூ எமது உள்ளத்தில் மலரும். அப்போது நாம் தேடிக்கொண்டிருக்கும் அமைதியையும் நிம்மதியையும் முதலில் எம்மிடம் காணுவோம். பின்பு குடும்பத்தில், சமூகத்தில், உலகம் முழுவதிலும் நாம் காணலாம். தோழனே! தோழியே! சிந்தித்துப்பார்........................

தோழமையுடன்,
S.வேணி,
உளசமூகப்பணியாளர்,
சுகவாழ்வு நிலையம்.

எதையும் நாளை செய்திடலாம்
என்று தள்ளிவிடாதே - மாறாக
எதையும் இன்றே செய்வேன் - என்ற
நம்பிக்கையுடன் செயல்ப்படுவாயானால்
முன்னேறும் வழி இதுதான்.

சிறு மலையைக் கடந்தே சிகரத்தை அடைய முடியும் - எனவே
எதிர்வரும் பிரச்சினைகளை எதிர்கொண்டு சிகரமான வாழ்வை
அடைந்து விடு.

அன்பிற்கு ஆயிரம் வழிகள் உண்டு
அன்பு எனும் உளியால்
அழகற்ற கற்பாறைகளைக் கூட
சிற்பங்களாக மாற்றலாம் - எனவே
நீ உன் அயலானை அன்பு செய் - ஏனென்றால்
“அன்பு தான் வீரத்தின் விளைநிலம்”

# உள்ளங்களின் எண்ணங்கள்.........

## பெண்ணே நீ நிமிர்ந்திடு!



அடுப்பென்று பிறந்து விட்டால்
நெருப்புடன் வாழ்ந்துதான் ஆக வேண்டும்
பெண்ணென்று பிறந்து விட்டால்
வேதனையுடன் வாழ்ந்துதான் ஆக வேண்டும்
நேர் வழி எதுவுமே தெரியாது
குறுக்கு வழி ஒன்றுதான் தெரியும்
குனிந்தால் குட்டுவார்கள்
பயந்தால் வெட்டுவார்கள்
நிமிர்ந்தால் கை கட்டுவார்கள்
பெண்ணே நீயும் நிமிர்ந்திடு
அறிவுக் கண்களைத் திறந்திடு
மாற்றான் வீட்டு மல்லிகை என்று
நினைத்து உன் தன்மானத்தை இழக்காதே
இதோ இப்போதே புறப்படு
உன்னைப் பழிப்பவரைக் கண்டு மகிழ்ந்திடு
அவர் கூறிடும் குறைகளை
உன் உள்ளத்தில் நிறைத்திடு
காலம் ஒரு சக்கரம் - அது
உனக்காக ஒரு போதும் தன்வேலையை நிறுத்தாது
உடனே செயற்படத் தொடங்கினால்
உன்னைப் பழிப்பவர் கூட - நாளை
உன் கையை எதிர்பார்த்து வந்திடுவர்.

A.Gayathry,
Cheety street,
Point Pedro.

## மலரும் புத்தாண்டு பிறக்குமா - - -?



புத்தன் போதித்த அறனும்
காந்தி சொன்ன அகிம்சையும்
இயேசு சொன்ன வேதமும்
கண்ணன் கூறிய கீதையும் -எங்கே?


அரிய மானிடத்துவம் மாறியே
அவலங்கள் தலைவிரித்தாடுதே
நிகழ்திடும் கொடுமைகள் வரையவே
என் எழுதுகோல் கூட -நடுங்குதே


என் அன்னை மண்ணில்
ஏன் இந்த அவலங்கள்
எட்டுத் திசைகளிலும்
ஏன் இந்தக் கலக்கங்கள்

மானிட தர்மம் மறைந்து
நித்தமும் அவலங்களின் வேள்விகள்
இதயங்களில் இரக்கங்கள் அழிந்துபோய்
ஓலமிடும் பிசாசுகளின் கூச்சல்கள்

நாகரீக மோகம் எனும் போதையில்
நடமாடும் இளம் இதயங்கள்
பண்பாடு கலாச்சாரம் அனைத்தையும்
பாழாக்கி மிதிக்கும் இவர் பாதங்கள்

மனிதம் என்ன விலை எனக்
கேட்கின்றன இவர் விழிகள்
மருந்திற்குக் கூட அது கிடையாது
சொல்கின்றது இவர் உதடுகள்





வேகம் வேகம் என்ன வேகம்
மரணத்தை நோக்கி ஓடும் வேகம்
அறிவியலால் வளரும் யுகத்தில்
ஆத்திரத்துடன் கூடிய அவசர வேகம்

உறவுகள் செத்துப் போய்
உலாவுகின்ற உணர்வுகள்
அகதியான தேசமெங்கும்
அனாதையாகும் உண்மைகள்

சீதன சீர்வரிசை ஏற்றங்களால்
சீரழிகின்ற கன்னியர் வாழ்வுகள்
சிரித்துச் சிரித்து சீண்டிப் பார்த்து
கலங்க வைக்கும் கல்யாண ராமர்கள்

உயர்ந்து கொண்டு போகின்ற
விலைவாசிப் பட்டியல்
நீண்டு கொண்டு போகின்ற
காணாமற் போனோர் பட்டியல்

வேதனை வேதனை வேதனைமேல் வேதனை
சோதனை இன்னும் ஏன் ஆண்டவனே?
வரம் கேட்டு வருகின்றேன் இறைவா
எந்தன் குரல் கேட்டு அருள்வாயே தலைவா



மானிட தர்மம் மலர வேண்டும்
மனித நேயம் வாழ வேண்டும்
மகிழ்ச்சியான ஒரு பொழுதாக
மலரும் புத்தாண்டு பிறக்குமா--?

க. கற்பகவல்லி
தும்பளை.

# மானிடனே!

ஒவ்வொரு விடியலும் உனக்காகத்தான்
இதை நீ மறப்பது கூடாதுதான்
சோம்பலை நீ தவிர்த்திடு - இதை
விலங்குகளிடம் கற்றிடு
கிணற்றுத் தவளையாய் வாழாதே
உலகம் உன்னைப் போற்றாதே
குருவை நாளும் மதித்திடு
கல்வியை நாளும் பெற்றிடு
அதனால் வாழ்வில் உயர்ந்திடு
ஆண்கள் பின் போகாதே
அவன் கைவிட்டான் என்று சாகாதே
வேறு வேலை என்றிருந்தால்
நாளை உன் பெயர் சொல்லிட
உனக்காய் ஒரு விடியல் மலரும்
மலரும் என்ற நம்பிக்கையில்
நீருற்றுங்கள் நாளை உங்கள்
வாழ்வு பூஞ்சோலை - அதைப்
பார்த்து மகிழ்பவர்கள் பலநூறு

N.Shobana,
V.C lane,
Manthikai,
Point Pedro.




## *சமாதானமே சந்ததியினரைக் காத்து விடு*

சமாதானமே நம் நாட்டிற்கு ஒளியை ஏற்றிவிடு
சந்ததியினா் சங்கடமில்லாமல் வாழ
சட்டென எம் முன் தோன்றிவிடு
சரித்திரம் படைப்பவர் மாண்டு போவதா?

வெண்புறாவே நீ விரைவில் வருவாயோ
வெற்றியுடன் நாம் வாழ
வெகு விரைவில் சிறகை விரித்து வந்துவிடு
வெறித்துக்கொண்டு வேதனையுடன் இருக்கும் மானிடனைப் -
- புரியமாட்டாயோ?

இதயங்களை இரத்தம் சிந்த வைக்கும்
இரக்கமில்லா உயிர்க் கொல்லிகளை
இறைவா உனக்குத் தெரியவில்லையா
இன்றே சமாதானத்தைத் தந்துவிடு




நிம்மதியாய் இருந்த நம்மை
நிரந்தர வீடின்றி நிர்க்கதி ஆக்கி
நிலை குலைய வைத்துவிட்டு - நீ
நித்திரை கொள்வது நியாயமோ?

சரித்திரம் படைப்போர் - இன்று
சடலங்களாக இருப்பது எப்படி
சற்று சிந்தியுங்கள் நமக்கு சுதந்திரம்
- இல்லையோ?
சமாதானமே வந்து விடு
விடிவைத் தந்து விடு

மோகனா மோகனதாஸ்,
மகாத்மா வீதி,
அல்வாய் வடக்கு அல்வாய்,
முன்பள்ளி ஆசிரியை.


# என் கவிதைக்கு சிறகு முளைத்தது.



அடி மனதின்
ஆழப் பெருவெளிகளிலிருந்து
கிளம்பி வெளியில் பறக்க
நினைக்கிறது என் கவிதை

எண்ணத்தின் பயிர்களை
வேரோடு பிடுங்கி
வார்த்தைகளில் உலவிக் கொள்ள
வண்ணங்களாலான
வண்ணத்துப்பூச்சியின் சிறகொன்றை
அது தேடிற்று

சிறகுகள் முளைத்து விட்ட மகிழ்ச்சியில்
வண்ணங்களை என் மீது புரட்டி
வானவில் வர்ணங்களை
தன் மீது பூசிக் கொண்டு
என் மூச்சுக்காற்று வழி
பறக்க எத்தனிக்கின்றது



பிடித்து வைக்க முடியாத
கவிதையாகி
அது பறவையாகி
விண் மீன்களைத் தொட்டு உரச
ஏகிறது வான் நோக்கி!

பாரதிதாசன் மதனரூபி,
பிருந்தாவனம்,
மகாத்மா வீதி,
அல்வாய் வடக்கு.

# தெருவோரப் பிச்சைக்காரி



கரைகிறது காலம்
கடக்கிறது நேரம்
மேகத்தின் கண்ணீராய்
தேங்கிய மழைநீரில்
காகிதக் கப்பல்
அவள் கண்களோ
கண்ணீர்க் கடலில்

யோசிக்கிறாள் - அவளை
யாசிக்க யாருமில்லை
நேசிக்க யாருமில்லை
சுவாசிக்கக்கூட முடியாமல்
யோசனையில் அவள்


கடப்பவர்கள் யாரும்
காணவில்லை அவளை
நடப்பவர்கள் நெஞ்சமோ
நினைக்கவில்லை அவள் பற்றி
நிழலான அவள் வாழ்வை
நிஜமாக்க யாருமில்லை
கனவுகள் இல்லை அவளிடம்
கண்ணீர் மட்டுமே

காவியம் படைக்கின்றன அவை
தெருவோரப் பிச்சைக்காரர்
அனைவரது வாழ்வையும்

யோ. நர்மதா
தும்பளை

# மதுவதனை விலக்கிடுவீர்

சந்தையில் வந்திறங்கும் சரக்கிதையா
சந்தோஷமாய் சனம் வாங்கி அடிக்குதையா
சிந்தையிலே பதிந்ததெல்லாம் பந்தாகி
நிந்தை நின்ற வார்த்தைகளாய் பறக்குதையா



காரினிலே ஓடி வரும் பெரியவரும்
தாரினிலே நடந்து வரும் சிறியவரும்
சாராயக் கடையிலே சந்தோஷமாய்
சேர்ந்து குடிப்பார்கள் குடிவகையை!

அன்றாடம் பாடுபட்ட பணமெல்லாம்
அடியோடு அழியுதையா! இதனாலே
பண்பு, பாசம், பழக்கமெல்லாம்
பாழாகிப் போகுதையா குடியாலே

இரவென்றும் பகலென்றும் பாராது
இச்சையின்றி மிச்சமின்றிக் குடித்ததனால்
இரத்தத்தடன் ஈரலுமே இயங்காது
இயமனடி சேர்ந்தோர்கள் பலருண்டு

இல்லறத்தை நல்லறமாய்க் காத்திடவும்
இல்லாமை இல்லாது போக்கிடவும்
பொல்லாத மதுவதனை விலக்கிடுவீர்
பெரியோராய்ப் பூமியிலே வாழ்ந்திடுவீர்

G.Piratheepa

# உன் வாழ்வு உன்னைக் காதலிக்கும்

துன்பங்கள், துயரங்கள், வேதனைகள் அத்தனையும் உன் சொந்தங்களாக்கு உன்னையே நீ அறிவாய், உன்னிலே நீ கொள்ளும் நம்பிக்கை உன்னை உயர்த்திடும். நீ கடந்து வந்த பாதையை ஒரு நிமிஷம் திரும்பிப்பார். வாழ்வின் அர்த்தங்கள் பலவற்றை அது சொல்லும். சோகங்கள் அனைத்தையும் மூட்டை கட்டி வைத்துவிட்டு இன்பத்தை மட்டும் உன் சொந்தமாக்கு. இவ்வுலகிலே வாழ்க்கையிலே பிரச்சினைகள் இல்லாதவர்கள் சந்திக்காதவர்கள் எவருமே இல்லை. நாம் வாழ வேண்டும், நாம் பிறந்தது வாழ்வதற்கு, சாவதற்கல்ல. எப்படிப்பட்ட பிரச்சினைகள் வந்த போதும் மனம் தளராது துணிவுடனும் தன்நம்பிக்கையுடனும் வரும் துன்பங்கள் அனைத்தையும் எதிர்கொள். பிரச்சினைகளிற்கு விடைகாண நீ முயலும் ஒவ்வொரு நிமிடமும் உன் வாழ்வின் வெற்றி உன் கைகளில். காலங்கள் உன் வாழ்வைச் சீரழிக்கலாம். கற்றுக் கொள் காலத்தின் வளர்ச்சியை. மாற்றிக் கொள் உன் வாழ்க்கையின் பாதையை உன் மீது நீ கொண்ட நம்பிக்கையோடு எழுந்திரு உன் வாழ்விற்காய் நகர்ந்திடு உன் வாழ்வின் பயணத்தில்.

நீ முன்னேறும் ஒவ்வொரு அடியும் உன் வாழ்விற்குப் பதில் கூறும். கனவும் நனவும் நிஜமும், நினைவும், சிரிப்பும், அழுகையும், கண்ணீரும் கலந்தது தானே வாழ்க்கை. வாழ்ந்துதான் பார்ப்போமே. வேதனைகளும் சோதனைகளும் நிறைந்த வாழ்வில் இவற்றை எதிர்கொண்டு முன்னேறுவதே வாழ்வின் வெற்றியல்லவா?

கலங்காதே தன்னம்பிக்கையோடு நிமிர்ந்து நின்று போராடு. உன் வாழ்வின் துயரங்களுடன் வாழ்க்கை வாழ்வதற்கே. வாழ்க்கை என்பது எழில் மிகு பூந்தோட்டம். மலர்கள் மட்டுமல்ல முட்களும் இருக்கத்தான் செய்யும். களிப்பு மட்டுமல்ல கண்ணீரும் கலந்தே இருக்கும். மனிதா! வாழ்வை வாழ்ந்து பார். வாழ்க்கைக்குப் பக்கங்கள் பல என்று அப்போது உனக்குப் புரியும். அவற்றை ஒவ்வொன்றாய் புரட்டிப் பார். சுவைமிகு தொடராகத் தொடர்ந்தே செல்லும். எமது வாழ்வு நிலையற்ற வாழ்வு என்று அப்போது புரியும். விண்ணிலே வீடு கட்டினாலும் நம் வாழ்வு பூமியில்தான். கானல் நீரைக் கைக்குள் அடக்க நினைக்காதே உன் வாழ்வின் நிகழ்கால இன்பத்திற்காய் எதிர்கால லட்சியங்களை மழுங்கடிக்காதே.

புல்லாங்குழலாய் மீட்ட வேண்டிய உன் வாழ்வை, மூங்கிலாகவே வைத்து முகாரி இசைக்காதே. கனவுகளோடும் கற்பனைகளோடும் உன் இலட்சியப் பாதையில் வெற்றிப் பயணத்தைத் தொடங்கு. வாழ்க்கை வாழத்தெரிந்தவனுக்கு அட்சய பாத்திரம். மற்றவனுக்கு அதுவே ஆலகால விசம். நீர்க்குமிழியல்ல வாழ்வு, நீரருவி. ஒருபோதும் எதிர்த்திசையில் பயணிப்பதில்லை என்றும் முன்னோக்கியே பாயும். முயற்சியுடனும் தன்னம்பிக்கையுடனும் உன் வாழ்வை நீரருவியாக்கு. முற்றுப்புள்ளி வைக்காதே. தொடரு உன் வாழ்வை. உன் வாழ்வின் நிஜங்கள் யாவும் உனக்கு சொந்தமாகும். முன்வைத்த காலை பின் வைக்காமல் முன்னேறு. துன்பங்கள் வரும்போது அதை சுலபமாய் எதிர்த்திடு. உன் மனதிற்குக் கடிவாளமிட்டு முன்னேறு. முனனேறிக்கொண்டேயிரு. உன் வாழ்வு உன்னைக் காதலிக்கும்.

ஸ்ரீசெந்தூரன்,
சண்டிலிப்பாய்.



நாட்டை அன்பு செய் நல்ல பிரஜையாவாய்
பெற்றோரை அன்பு செய் பாசத்தை அறிவாய்
குருவை அன்பு செய் அறிவைப் பெறுவாய்
நாட்டை அன்பு செய் நல்ல நண்பனை அடைவாய்
இயற்கையை அன்பு செய் கவிஞனாவாய்
இறைவனை அன்பு செய் சொர்க்கத்தை அடைவாய்

## *உயிர்ப்பு விழாவின் நிறைவு*

எமது வாழ்க்கை ஒரு நிடிண பயணம். இந்தப்பயணத்தில் எமக்குப் பலவித அனுபவங்கள் ஏற்படுகின்றன. எமக்கு ஏற்படுகின்ற அனுபவங்கள் சில இனிமையானவை, சில கசப்பானவை. எமது வாழ்க்கை தனியே றோசாப்பூக்கள் நிறைந்த மெத்தையல்ல. எமது வாழ்விலே பூக்களோடு சேர்ந்து முட்களும் உண்டு. முட்களைப் பார்த்து முடங்கிவிடாமல் பூவின் இனியையை அனுபவிக்கத் தெரிந்த மனிதன் சந்தோசமடைகிறான். எமது வாழ்விலே ஏற்படும் தடைகளைப் பார்த்துப் பின்வாங்காமல், வாழ்க்கையின் உண்மையான, முழுமையான அர்தத்த்தை உணர்ந்து வாழ்வின் இனிமையை முழுமையாக அனுபவிக்க முயலும் போது தடைகளைப் படிக்கற்களாக மாற்றும் போது எமது வாழ்வில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. வாழ்வில் வெற்றியைக் காண வழி பிறக்கின்றது.

இவ்வாறான வாழ்விலே எமக்குப் பல எதிர்பார்ப்புக்கள், ஏக்கங்கள் இருக்கவே செய்கின்றன. நாம் வாழ்விலே பல காரியங்களிற்காக காத்திருக்கின்றோம். எமது காத்திருப்பின் உண்மையான இலக்கை அடையும் வரை எமது காத்திருப்பு தொடர்கிறது.

உலகெங்குமுள்ள கிறிஸ்தவர்கள் பெருமகிழ்வோடும் சந்தோஷத்தோடும் கொண்டாடி மகிழும் கிறிஸ்து உயிர்ப்பு விழாவானது (Easter) ஒரு நாளிலே நடந்து முடிந்த ஒரு நிகழ்வு அல்ல. மாறாக இஸ்ராயேல் என்று பெயர் சொல்லி அழைக்கப்பட்ட மக்களினம் தங்கள் வாழ்விலே பல ஆண்டுகளாக அனுபவித்து வந்த அடிமைத்தனம், அடக்குமுறை, இடப்பெயர்வுகள், யுத்தங்கள் இவற்றிலிருந்து தங்களை மீட்க ஒரு மீட்பர், இரட்சகர் வருவாரென 2000 ஆண்டுகளிற்கு மேலாகக் காத்திருந்த எதிர்பார்ப்பு கிறிஸ்துவின் உயிர்ப்பில் முழுமைபெறுகின்றது.

இந்த நீண்ட 2000 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காத்திருப்பானது இம் மக்களது வாழ்விலே இலகுவான ஒன்றாக அமைந்திருக்கவில்லை. இந்தக் காத்திருப்பின் போது இம்மக்கள் பலவிதமான துன்பங்கள், ஏமாற்றங்கள், இழப்புக்கள், வருத்தங்கள், அடிமைத்தனங்கள், அடக்குமுறைகள் போன்ற சொல்லிலடங்காத பல துன்பங்களை அனுபவித்தார்கள். இருந்த போதிலும் அவர்கள் தங்களிற்கு ஒரு

மீட்பு, விடிவு உண்டு என்ற முழு நம்பிக்கையோடு தங்களது காத்திருப்பிலே உறுதியாக இருந்தார்கள். அந்தக் காத்திருப்பின் நிறைவாகவே கிறிஸ்து எனும் உலக மீட்பர் இப்பூவுலகில் மனித அவதாரம் எடுத்தார்.

மனுவான இயேசு தனியே இஸ்ராயேல் மக்களிற்கு மட்டும் உரிய ஒருவராக அவதரிக்கவில்லை. அவர் முழு உலகிற்குமே, முழு மனித இனத்திற்குமே மீட்பராக இவ்வுலகிலே அவதரித்தார். மனிதனாக அவதரித்த இறைமகன் கிறிஸ்து தனியே ஒரு இனத்திற்கு மாத்திரம் உரிய ஒருவராக இவ்வுலகில் வாழவில்லை. அவரது 33 ஆண்டுகால இவ்வுலக வாழ்வில், குறிப்பாக பகிரங்கமாக போதித்துப் பணி செய்த மூன்று ஆண்டுகளில், அவர் தன்னை குறிப்பிட்ட ஒரு வட்டத்திற்குள் கட்டிவைக்கவில்லை. அவர் பலதரப்பட்ட, பல இன மக்களோடும், வாழ்விலே பலவிதமான துன்பங்களை, தோல்விகளை, சவால்களை அனுபவித்த மக்களோடு பழகி, அவர்களோடு தனது வாழ்வை முழுமையாகப் பகிர்ந்து கொண்டார். அவர் இறந்த போதும், குறிப்பிட்ட ஒரு இனத்திற்காக இறக்கவில்லை. அவர் இறந்நதது அனைத்துலக மக்களும் நிறைவான, முழுமையான வாழ்வு பெறவும், மீட்பு பெறவுமேயாகும்.

ஆகவே கிறிஸ்துவின் உயிர்ப்பு விழாவானது தனியே கிறிஸ்தவர்களிற்கு மாத்திரம் உரிய ஒரு விழா அல்ல. அது தமது வாழ்வில் விடிவை, மீட்பை எதிர்பார்க்கும் அனைத்து மக்களிற்கும் உரிய ஒரு விழா. தங்களது வாழ்வில் உண்மையான மகிழ்சியை, அமைதியை, விடுதலையை அனுபவிக்கும், மற்றும் அனுபவிக்க காத்திருக்கும் ஒவ்வொருவரிற்கும் கிறிஸ்து உயிர்ப்பு விழா(Easter) மீட்பிற்கான முழு மனித விடுதலையை, நம்பிக்கையை, நிறைவைத் தருகின்றது. எவ்வாறு ஒரு தாயானவள் தனது சகல வேதனைகளையும், வலிகளையும் தனது குழந்தை பிறந்தவுடன் மறந்து, குழந்தையின் பிறப்பில் மகிழ்வடைகின்றாளே, அதே போன்று போர், இடப்பெயர்வு, அடக்குமுறை, வறுமை போன்ற பல்வேறு வேதனைகளை காத்திருக்கும் மனித இனம், ஒரு கணம் தனது அனைத்துத் துன்பங்களையும், கவலைகளையும் மறந்து மகிழ வேண்டிய ஒரு நிகழ்வே கிறிஸ்து உயிர்ப்பு விழா. கிறிஸ்துவின் உயிர்ப்பு மனுக்குலத்தின் மீட்பின் விடுதலையின் வெற்றி, நம்பிக்கையைத் தருகின்றது. விடுதலையின்,

அமைதியின், நீதியின் காற்றை அனைவரும் சுவாசிக்க உரித்துடையவர்கள் என்ற நம்பிக்கையை எம்மில் கட்டியெழுப்புகின்றது. கிறிஸ்துவின் உயிர்ப்பால் ஏற்பட்ட இந்த அமைதியும், மீட்பும் முதலில் எங்கள் உள்ளங்களில் மலர வேண்டும். அப்பொழுதுதான் அது எமது இல்லங்களிலும், எமது நாட்டிலும், முழு உலகிலும் மலர முடியும். இதையே கிறிஸ்துவின் உயிர்ப்பு ஞாபகப்படுத்துகின்றது.

எனவே மரண நிழல் சூழ்ந்த நாட்டில் வாழ்வோருக்கு ஒளி உதயமாகியது போல, கிறிஸ்துவின் மரணம் வெற்றியின் ஆரம்பம், விடுதலையின் ஆரம்பம், மனுக்குல மீட்பின் முழுமையும் நிறைவுமாகும். கிறிஸ்து இறந்து அப்படியே புதையுண்டு விடவில்லை. மாறாக மடிந்த கோதுமை மணி விருட்சமாக வளர்வது போல, இறந்த கிறிஸ்து வெற்றியோடு உயிர்த்தெழுந்து மீட்பு எனும் பரிசை உலகிற்குப் பெற்றுத் தந்தார். "உயிரோடு இருப்பவரைக் கல்லறையில் தேடுவதேன்? அவர் இங்கே இல்லை. அவர் உயிருடன் எழுப்பப்பட்டார்." (லூக் 24:5-6) உயிர்த்த கிறிஸ்து எங்களிற்குத் தரும் பரிசு மீட்பும் அமைதியுமாகும்.

"உங்களுக்கு அமைதி உரித்தாகுக" (லூக் 24:36)

அருட்சகோரர்
மெனோ பஸ்ரி ஜயந்த (அமதி)

---

உண்மைக்காக எதையும் திறக்கலாம், ஆனால் எதன் பொருட்டும் உண்மையைத் திறக்கக் கூடாது.

பொய்மையின் வழி துணைவழி, சத்தியத்தின் வழி தனிவழி.

---

# அஞ்சலியகத்தின் பணிகளும் அதன் வளர்ச்சியும்

2005.05.22 அன்று அஞ்சலியக உளவளத்துணை நிலையம் தனது பணியினை ஆரம்பித்தது. இழப்பின் துயரோடு இருப்பவர்களையும் இடப்பெயர்வில் சிக்கித்தவிப்பவர்களையும் ஆற்றுப்படுத்தும் நோக்குடன் தனது பணியைத் தொடங்கியது.

அஞ்சலிப் பூக்கள் சிறுவர்கழகம் பிரதேச ரீதியாக பதிவு செய்யப்பட்டு செயற்பாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.
அஞ்சலி இளையோர் கழகம் உருவாக்கப்பட்டு அஞ்சலி சஞ்சிகை வெளியீடு, இயற்கை அனர்த்தத்தினாலும் போர் அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களோடு உடனின்று பயணிக்கிறது.
அஞ்சலியகத்தினால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் 230 சிறுவர்களிற்கு மாலை நேரக் கல்வி இலவசமாகக் கற்பிக்கப்படுவதுடன் சத்துணவும் வழங்கப்பட்டு வருகின்றது.
அடிப்படை விழிப்புணர்வுக் கருத்தரங்குளையும் பயிற்சிப் பட்டறைகளையும் நடாத்தி வருகின்றது.
விஷேட விதமாக பாடசாலைகளில் ஆசிரியர்களிற்கும், மாணவர்களிற்கும் உளவியற் கருத்தரங்குகள் வன்முறையற்ற தொடர்பாடல், உளவளத்துணை ஆற்றுப்படுத்தல் சிகிச்சைகள் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.
மாற்றுவலுவுள்ளோர்களை மகிழ்விக்கும் நோக்குடன் அவர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது.
பாதிக்கப்பட்ட குடும்பங்களுடன் உளவளத்துணைச் செயற்பாடு, மாதாந்த ஒன்றுகூடல், இல்லத்தரிசிப்பு முதலான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.
வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுககு கல்விக்கான மாதாந்தக் கொடுப்பனவுகள், விடுதி மாணவர்களுக்கு உளவளத்துணைச் செயற்பாடு, கருத்தமர்வுகள், கல்விசார் போட்டிகள் நடாத்தி வருகிறது.

துணையிழந்தவர்களுக்கு அவர்களது பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடனுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

மாதந்தோறும் மருத்துவ முகாம் மகப்பேற்று வைத்திய நிபுணர், பொது வைத்திய நிபுணர்களால் நடைபெற்று வருகிறது.

இந்து, கிறிஸ்தவ, கலை கலாச்சார நிகழ்வுகள் வருடந்தோறும் கொண்டாடப்பட்டு வருவதுடன் சர்வதேச தினங்களும் நினைவுகூறப்பட்டு வருகிறது.

சிறப்பான நாட்களில் அஞ்சலி இளையோர் சமூகம், பாதிப்பிற்குள்ளான குடும்பங்கள், அஞ்சலிப்பூக்கள் சிறுவர்கழகப் பெற்றோர்கள், அஞ்சலிப்பூக்கள் சிறுவர் சமூகம், டிமசனட் குடும்பம், ஆகியோரை ஒரே குடும்பமாக இணைத்து விருந்தோம்பல் வழங்கப்பட்டு வருகின்றது.

மாணவர்களின் முன்னேற்றத்தினையும், கல்வி நிலையினையும் கருத்திற் கொண்டு கல்வி சார் கருத்தரங்குகளும், மாதந்தோறும் பெற்றோர்களுக்கான ஒன்றுகூடலும் இடம்பெற்று வருகின்றது.

மாணவர்களின் குடும்ப நிலையை அறிந்து கொள்வதற்கும் கல்வியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும் இல்லத்தரிசிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

மக்களின் மேலதிக தேவைகளைக் கருத்திற் கொண்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன் பரிந்துரை செய்யப்பட்டு அவர்களின் தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றது.

விஷேடமாக ஆங்கில அறிவை மாணவர்கள் மத்தியில் வளர்க்கும் நோக்குடன் அருட்தந்தை, அருட்சகோதரிகள், அருட்சகோதரர்களால் ஆங்கிலக் கல்வி கற்பிக்கப்படுகிறது.

**அஞ்சலியகப் பணியாளர்கள்.**

*அறியவேண்டியவை.*

நடந்தே உலகைச் சுற்றி வந்த எழுத்தாளர். ஸ்டீவன் நியூமன்

உலகம் முழுவதும் வாழும் ஒரே உயிரினம் நாய்.

**பூவொன்று புயலானது- - - - -**

நரசிம்மபல்லவன் பல்லவ நாட்டு மன்னன். காஞ்சி மாநகர மக்களின் அன்பிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவன். மக்கள் உள்ளங்களில் குடியிருப்பவன். அவன் வீரத்திலும் சிற்பக் கலையிலும் தலை சிறந்து விளங்கினான். இவன் வேல் பிடித்த இடமெல்லாம் வீர வரலாறு. வாள் பிடித்த இடமெல்லாம் வெற்றி வரலாறு. போரிட்ட இடமெல்லாம் இரத்தப் பேராறு. வரலாறு படைத்தவன் தான் காஞ்சி மன்னன். இவன் காலத்தில் இவன் கைவண்ணத்தில் கற்களெல்லாம் சிலைகளாக சிற்பங்களாக உயிர் பெற்றிருந்தன. காஞ்சி மாநகரத்தின் எத்திசையிலும் எங்கு திரும்பினாலும் வாட் சத்தங்களை விட உளிச் சத்தங்களே கேட்ட வண்ணம் இருக்கும்

காஞ்சி மாநகரத்திற்கு புதிதாக விஜயம் செய்வோரும், கடல் கடந்து வந்து வியாபார நோக்குடன் வந்து போகும் பெரும் வியாபாரிகளும், மாலுமிகளும், மேலைநாட்டு சமயப் பெரியோர்களும் எங்கே நாம் இடம்மாறி அழகிய சிற்பங்கள் உயிரோடு வாழும் ஒரு நாட்டிற்கு வந்து விட்டோமா? என ஏங்கி வியந்து! தங்களையே மெய்மறந்து அதிசயத்து நின்றவர்கள் எத்தனையோ பேர். அதே நேரம் நாட்டின் பாதகாப்பும் உச்ச நிலையிலேயே இருந்தது. வாளும், வேலும், விழிகளும் குறி பார்த்த வண்ணமே இருக்கும்.

நாடும் மொழியும் அவன் இரு கண்கள். நாட்டையும் மக்களையும் தன் உயிரிலும் மேலாக நேசித்தான். வாதாபி மன்னன் புலிகேசிக்கு கப்பம் கட்ட மறுத்தவன். அடி பணிய மறுத்தவன். எப்படியும் காஞ்சியைப் பிடிக்க சேண்டும் மன்னன் நரசிம்ம பல்லவனை அடிபணிய வைக்கவேண்டும் என பல தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் செய்து வருகிறான் வாதாபி மன்னன் புலிகேசி. அந்தப் பரபரப்பான காலகட்டத்தில் தான் காஞ்சி மன்னன் நரசிம்ம பல்லவனின் அரச சபை கூடுகிறது. மந்திரிகள், அமைச்சர்கள், தளபதி பரஞ்சோதி, புலவர்கள், சிற்பக்கலைஞர்கள், குடிமக்கள் பலரும் சபையில் வீற்றிருக்கின்றனர். அந்நேரம் காவல் வீரன் ஒருவன் கையில் வேலுடன் சபையில் நுழைகிறான். அவன் தன்னுடன் ஒருவனையும் பிடித்து வந்திருக்கிறான். அரசே வணக்கம்! இவன் இந்த நாட்டிலே பிறந்து இந்த நாட்டிலே வளர்ந்து இந்த நாட்டின் உப்பைத் தின்று கடைசியில் எங்கள் நாட்டையே காட்டிக் கொடுக்கச் சதி செய்தான்.

இவன் புலிகேசியின் கைக்கூலிப் பணத்திற்காக, அற்ப சலுகைகளிற்காக சோரம் போய் விட்டான். இவனைத் தகுந்த ஆதாரங்களுடன் பிடித்த வந்திருக்கிறேன். இந்தக் கயவனுக்கு தகுந்த தண்டனை வழங்க வேண்டும் அரசே.

என்ன எங்கள் நாட்டைக் காட்டிக் கொடுத்தானா? வீரம் செறிந்த இந்த மண்ணிலே ஒரு புல்லுருவியா புலிக்கேசியின் கைக்கூலி? போருக்குப் பிள்ளைகளை அனுப்பிவிட்டு இன்னும் போருக்கு அனுப்ப வேறு பிள்ளைகள் இல்லையே என ஏங்கித்தவிக்கும் அன்னையர் வாழும் புகழ்பூத்த பூமியிது. இங்கு வீரம் விலைபோனதில்லை. விவேகம் சோர்வுற்றதில்லை. தினவெடுத்த தோள்களோடு, விம்மிப் புடைத்த புஜங்களோடும், வாளோடும், வேலோடும் போராடக் காத்திருக்க இவன் எப்படித் துரோகியானான். இவனுக்கு நாம் கொடுக்கும் தண்டனை மற்றவர்களுக்கு ஒரு பாடமாக அமையட்டும். இவனை விஷம் பூசிய கத்தியால் குத்திக் கொலை செய்ய வேண்டும். இவன் துடிதுடித்தச் சாக வேண்டும். இவனை இப்போதே இந்தச் சபையிலேயே கொல்ல வேண்டும்.

அந்நேரம் அரச சபைக்குள் பெண்ணொருத்தி ஓடி வருகிறாள் - - - - - - - - -

தொடரும்- - - - - - -

பொன்.மகாதேவா
தும்பளை.

ஏர்முனையை விட எழுதுகோல் முனை பெறுமதி வாய்ந்தது.

விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் வெற்றியைப் பெற்றுத்தரும் சாதனங்கள்.


உனது திறமையை சொல்லிக் காட்டாதே, செயலில் காட்டு.

அஞ்சலி இளையோர்களின் ஆற்றல்களினால்
உருவாக்கப்படும் இச்சஞ்சிகையை வளர்க்க
உங்கள் காத்திரமான படைப்புக்களையும்
விமர்சனங்களையும்
எழுதி அனுப்புங்கள். அஞ்சலியின் வளர்ச்சிக்கு
உங்கள் அன்பான ஆக்கபூர்வமான விமர்சனங்களை
எதிர்பாத்துக் காத்திருக்கின்றோம்.


இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில்
'அஞ்சலி' அளப்பரிய ஆனந்தமடைகிறது.


"இளையோரே! பெரியோரே!
திரளுங்கள் ஒன்றாக
பேனாமுனை கொண்டு இப் பேருலகை வெல்வோம்."

PUBLIC LIBRARY
JAFFNA



ஆண்டிறுதி நிகழ்வு






சிறுவர் விளையாட்டுச் சிகிச்சை நிகழ்வு








இளைஞர்களுடன் ஓர் ஒன்றுகூடல்



மிருசுவில் முகாம்
மக்களுடன் அமதிகள்



வன்முறையற்ற தொடர்பாடல் பயிற்சிப் பட்டறை



பொங்கல் நிகழ்வு



சிறுவர்களிற்கான சத்துணவு வழங்கல்